


# वैद्यचान्द्रिका

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்ரிகை

Vol. 9 | September, 1947 | No. 9

ஆசிரியர் :

V. B. நடராஜ சாஸ்த்ரீ, ஆயுர்வேதாசார்ய.
வைத்ய விசாரத, வைத்யவாசஸ்பதி.

ப்ரகாசகர் : பண்டித ஸ்ரீ. மெ. ஸௌந்தரராஜாசார்யர்.

# MODEL PHARMACY,
## BEZWADA.




MP's **மாடல் பார்மஸியின்**

**கைகண்ட ஔஷதங்கள்**

**பிளட்-டோன்:** இரத்த வீர்ய விருத்திக்கும் இதர கோளாறுகளுக்கும் இன்றியமையாத ஓர் பொது டானிக்

**காப்பீன்ஸ்:** இருமல் ஜலதோஷம் இவைகளுக்கு ஓர் கைகண்ட மருந்து

**மலேனல்:** மலேரியா ஜுரத்திற்கு கொய்னா சம்பந்தமில்லாத சிறந்த ஔஷதம்

**மென்ஸால்:** ஸ்திரீகளின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது

**சிசுடோன்:** குழந்தைகள் தேக வளர்ச்சிக்கு ஓர் சஞ்சீவி

**மில்கோபின்:** தாய்மார்களுக்கு குழந்தைகளுக்குத் தேவையான தாய்ப்பாலை அதிகரிக்கவல்ல சிறந்த ஔஷதம்

**மாடல் பார்மஸி, பெஜவாடா.**

பூர்ண விற்பனை உரிமையாளர்:

**ராஜா ராம்சந்தர் & கம்பெனி,**

***520. திருவல்லிக்கேணி ஹைரோட், மதராஸ்-5.***

Sole Distributors: RAJA RAMCHANDER & Co.,
520, High Road Triplicane, Madras—5

**Stocks available from:**

Appah & Co. Esplanade, Madras.

South Indian Medical Stores Ltd.,
Raja Street, Coimbatore.

The Trichy Ayurvedic Union Ltd.,
Chinnakadai Street, Trichinopoly,

Sivanandam & Co.
7, East Avani moolai Street,
Madura.

The Erode Medical Supplies Ltd.,
Erode.

Kandan Drug Stores,
Mettupalyam.

General Stores Canteen,
Nursing Home,
Dharapuram.

Messrs. C. Arumugam Pillai & Sons
Shop-keepers &
General-Merchants, Dindigal.

Chandra Pharmacy,
Rama Nilayam, North main Street,
Pudukkottah.

The Ideal Agencies,
Singh Medical Hall.
Chekkalai Road, Karaikudi.

# AYURVEDIC NURSING HOME

## ஆயுர்வேத ஆரோக்கிய சாலை

விரண வைத்தியம் (Surgery) உள்பட ஸகலவிதமான சிகித்ஸைகளுக்கும், நவரைக்கிழி, தாரை பிழிச்சல் முதலிய பஞ்சகர்மாங்க சிகித்ஸைகளுக்கும் வெகு காலமாய் மிகப்பிரஸித்தமானது.

பிரதானவைத்யர்:—

V. B. நடராஜசாஸ்த்ரீ,
ஆயுர்வேதாசார்ய,

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர் ரோடு, திருச்சிறுப்பள்ளி.
தந்தி: "ATREYA"



# GERMOL.

## :: ஜெர்மால். ::

சொரி, சிரங்குகள், மூன்று நாளில் குணம்.

* * *

SCIENTIFIC INDUSTRIALS,
13. BROUGH ROAD,
ERODE. S. I.




ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்ய சந்த்ரிகா.

தொகுதி 9]　　ஸெப்டம்பர், 1947　　[பகுதி 9

---


**ஆரோக்ய சந்த்ரிகா —**

| | | |
|---|---|---|
| சிசு பரிபாலனம் | ... | 213 |
| திரவியகுண மஹிமை— சுக்கு | ... | 221 |
| ஜ்யோதிஷமும், வைத்யமும் | ... | 228 |
| தஞ்சை ஸரஸ்வதீ மஹாலயமும், வைத்தியச் சுவடிகளும் | ... | 238 |
| ஸ்வராஜ்ய ஸித்தி | ... | 241 |
| அறிவிப்பு | ... | 243 |
| மதுமேஹத்தில் ஸ்வானுபவம் | ... | 244 |
| செய்திக் குறிப்புகள் | ... | 246 |
| தபால் பெட்டி | ... | 248 |

# தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலம்.

அகில பாரத வர்ஷீய ஆயுர்வேத மஹாஸம்மேளனத்தின்

**தமிழ்நாடு கிளைச்சங்கம்.**

வருஷச் சந்தா ரூ. 3–0–0.

ஸ்ரீ T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, M. A. L. I. M.
**பொதுக் கார்யதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,**
**9. கேசவபெருமாள் மேலத்தெரு, மைலாப்பூர், மதராஸ்.**

என்ற விலாஸத்திற்கு **மண்டலத்தின்** பொது நிர்வாஹ விஷயங்களைப்பற்றி எழுதிக்கொள்ள வேண்டும்.

---

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின்
மாதப் பத்திரிகை.

இங்கிலீஷ் மாதம் முதல் வாரத்தில் வெளியாகும்.
மண்டல அங்கத்தினர்களுக்கு இனமாய் அனுப்பப்படும்.

ஸ்ரீ A. ராகவராவ், A. L. I. M.
**உபகார்யதர்சீ, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,**
**17. சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு,**
**திருச்சினப்பள்ளி.**

என்ற விலாஸத்திற்கு மண்டலத்தின் சந்தாத்தொகை அனுப்பவேண்டும். **வைத்திய சந்திரிகையின் விளம்பர விஷயங்கள்,** சந்தாதாரரின் விலாஸம் மாறுதல், பிரதி இங்கிலீஷ் மாதம் 15-ந் தேதிக்குள் சந்திரிகை கிடைக்காவிடில் உடனே தெரிவித்தல், மற்றும் வைத்திய சந்திரிகையின் நிர்வாஹத்தைப் பற்றிய விஷயங்களுக்கும் எழுதிக்கொள்ள வேண்டும்.

---

ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரீ, ஆயுர்வேதாசார்ய,
**ஆசிரியர்: வைத்திய சந்திரிகா,**
**ஆத்ரேயாசிரமம், தென்னூர் ரோடு, திருச்சினப்பள்ளி.**

என்ற விலாஸத்திற்கு வைத்திய சந்திரிகையிலும் ஆரோக்கிய சந்திரிகையிலும் பிரசுரம் செய்யவேண்டிய கட்டுரைகள், செய்திக் குறிப்புகள், ஸந்தேஹங்கள், பதில்கள், சர்ச்சைகள், ரோகக் குறிப்புகள், (Case Sheets) விமர்சத்திற்குப் புத்தகங்கள், பதில் பத்திரிகைகள் இது போன்றவைகள் எல்லாம் பிரதி இங்கிலீஷ் மாதம் 15-தேதிக்குள் ஆசிரியருக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

# சிசு பரிபாலனம்

[பண்டித ஸ்ரீ. P. S. ராமசர்மா, கரூர்.]

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சாதாரணமாக நமது தேசத்தில் பிரஸவித்தவுடன் தாய்க்கு கஸ்தூரி கொடுப்பது வழக்கம். இது மிகவும் பலன் தரும் ஔஷதம் என்பது பொதுவாக எல்லோருக்கும் தெரியும். ஆனால் இதைவிட ஓர் உயர்ந்த மருந்து தற்காலத்தில் அநேகர்களால் உபயோகிக்கப் பட்டு வருகிறது. மிகுந்த ஆசாரமுடையவர்கள் கூட ஸ்பென்ஸர் முதலிய இடங்களிலிருந்து ஒளிமறைவாக சீசாவுடன் வாங்கிக் கொண்டுவந்து வீட்டில் மறைத்து வைத்திருந்து பிரஸவித்தவுடன் தாய்க்குக் கொடுக்கிறார்கள். இவ்வழக்கம் அயல்நாட்டு நாகரீகத்தாலும் அவர்களின் வைத்திய பிரசாரத்தாலும் ஏற்பட்டிருப்பதாகவே பலர் கருதுகிறார்கள். ஆனால் அது ஒருவிதத்தில் நியாயமானதே. ஏனென்றால் நமது முன்னோர்கள் காங்கிரஸ் கொள்கையை விட இருவகையில், அதாவது ஏழைகளின் பணம் அழிவதுடன் இகபரத்தைக் கெடுக்கும் பெரிதான பாபத்தைச் செய்யத் தூண்டும் போதையைத் தருவதால், மத்யபானத்தைச் சட்டபூர்வமாக (ஸ்மிருதிகள் மூலமாக)வே மிகவும் விலக்கியிருந்ததால் மருந்துகளாக உபயோகிக்கக் கூட அருவருப்பு அடைந்து வந்தார்கள். வாக்படாசார்யர் மத்யம் மாம்ஸம் முட்டை முதலியவை உயர்ந்த மருந்துகள் என்பது மிகவும் உண்மையான போதிலும், என்றைக்கும் அழிவடையக் கூடிய இவ்வுடலை பாபம் செய்து காப்பாற்றி என்ன மேன்மை என்று கருதுகிறார். அஷ்டாங்க ஸங்கிரஹத்தில் हंसबर्हिण दक्षाण्डाः यद्यप्यत्यन्तशुक्रदाः... कर्तव्यमेव कर्तव्यं प्राणापायेपि नेतरत् என்று கூறுகிறார், இதுவே மஹரிஷிகளின் கொள்கை. ஆனாலும் துணிந்து உபயோகிப்பவர்களை முன்னிட்டு மத்யமாம்ஸாதிகளும் ஆயுர்வேதத்தில் அபரிமிதமான அளவில் ஔஷதங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன. இதை அனுசரித்தே பிரஸவித்தவுடன் அதிக வீர்யத்துடன் கூடிய மத்யத்தைத் தாயாருக்குக் கொடுப்பதால் பிரஸவித்ததனால் ஏற்படும் சரீர சிரமம் நீங்குவதுடன் கர்ப்பப்பை முதலிய உள் உறுப்புக்கள் சிக்கல் நீங்கி, சுத்த

மாய் சரீரத்தில் குழந்தையின் ஆகாரத்திற்கு உற்பத்தியாகும் தாய்ப் பாலையும் வாதாதி தோஷங்கள் கெடுக்காமல் லகுவாகச் செய்யக் காரணமாகிறது என்று வாக்படாசார்யர் கூறுகிறார். गर्भे निपतिते तीक्ष्णं मद्यं सामर्थ्यतः पिबेत्—गर्भकोष्ठविशुद्ध्यर्थमार्तिविस्मरणाय-च— இதை அனுசரித்து தற்காலம் கொடுக்கப்படும் பிராண்டி (Brandy) முதலியதும் நமது ஆயுர்வேதத்தின் கொள்கையின் அம்சங்கள்தான். பிரஸவித்த அதிர்ச்சியிலிருந்து தாயின் சரீரத்தை சீர்ப்படுத்துவது குழந்தையின் ஆரோக்கியத்திற்கும் எவ்வழிகளிலும் முக்கியமானதால், பிராண்டி முதலிய தனி மத்யங்களை உபயோகப்படுத்துவதைவிட மிருகமதாஸவம், மிருதஸம்ஜீவினீ ஸுரா அல்லது கஸ்தூரி சேர்த்த தசமூலாரிஷ்டமாவது சரீரம் தேசம் காலம் முதலியவற்றை அனுசரித்து ஒருதடவையோ பல தடவைகளோ கொடுத்து வருவது மிகவும் குணமானது. இவற்றில் பிராண்டியில் இருக்கும் துர்க்குணங்கள் கிடையாது. Alcohol என்னும் போதை வஸ்து மிகவும் குறைவாகவே இருக்கிறபடியால், போதையும் அதனால் ஏற்படும் பிதற்றல் முதலியவற்றால் ஸந்நிபாதம் வந்துவிட்டதோ என்று வைத்தியர்கூட ஏமாந்து போகும் நிலைமையும் ஏற்படாது. மதுவிலக்குச் சட்டப்படி அரசாங்கத்துத் தடை உத்திரவு போட்டாலும் நியாயமாகாது. ஏனென்றால் இவை மத்யத்தின் சில நல்ல குணங்களை மட்டும் தருவதுடன் கெட்ட குணங்களாகிய போதை போன்றதை ஏற்படுத்துகிறதில்லை. இவ்விதம் பிரஸவித்த ஸ்திரீக்குக் குறைந்த அளவில் 10 நாட்கள் வரையிலும் இவைகளை, அதிலும் முக்கியமாக தசமூலாரிஷ்டத்தை அறை மருந்தாகவும் உபயோகப் படுத்துவதால் பிரஸவித்த பிறகு ஏற்படும் வியாதிகள் தாயாருக்கும் குழந்தைக்கும் அணுகாமல் இருப்பதுடன் இவ்விதமான மருந்துகள் சேர்ந்து பத்திய முறையில் உற்பத்தியாகும் தாய்ப்பால் குழந்தையின் ஆரோக்கியத்திற்கும் இன்றியமையாததாகும்.

பிரஸவமான பிறகு கிரமப்படி நஞ்சு வெளிவராவிடில் தாய்க்கு மிகுந்த ஆபத்து விளைவிக்கும். இது சரியான காலத்திற்குள் வெளிவராவிடில் சதகுப்பை, வசம்பு, கோஷ்டம், திப்பிலி, கடுகு, இந்துப்பு இவைகளை அரைத்து சூடான ஜலத்தில் கலக்கி க்ஷீரபலா, தாந்வந்தரம் முதலிய தைலம் கொஞ்சம் கலந்து கொடுக்கவேண்டும். இந்த நஞ்சு உள் தங்கி நின்றால் சன்னிபாதத்தின் குறிகள் ஏற்பட்டு, கை கால்கள் இழுப்பு வரும், நினைவு தவறும், பிதற்றல் ஏற்படும், பல் கட்டும். இவ்விதம் பல குறிகள் தோன்றும். இதை ஆங்கிலத்தில் Eclampsia என்று கூறுவார்கள். இதற்கு ஸ்னேஹஸ்வேத சிகித்ஸைகள் மிகவும் தகுந்தவை. தைலத்ரோணியில் படுக்கவைத்து தைலலேபம், தாரை, ஒத்தடம் முதலியவை செய்யவேண்டும். ஓமம் வறுத்து ஒத்தடம் செய்வது மிகவும் குணம் தரும்.

இந்த சிகித்ஸைகளால் நஞ்சு வெளிவராவிடில் தகுந்த வைத்திய உதவியை நாடவேண்டும்.

இதுவரையிலும் குழந்தையின் நன்மையை முன்னிட்டு தாயாருக்கும் வேண்டிய சில முக்கிய உபசாரங்களைக் கூற நேர்ந்தது. இதற்குமேல் குழந்தையை மட்டும் பொறுத்த விஷயங்களை விவரிப்போம்.

குழந்தை பிறந்தவுடன் உல்பம் (उल्ब) என்று சொல்லப்படும் பையின் சேர்க்கையால் குழந்தையின் சரீரத்திற்கு ஏற்படும் அசுத்தங்களைப் போக்கடிக்கவேண்டும். येनोपलिप्तो वर्धते गर्भः इत्युल्बः— என்று அர்த்தம் செய்வதால் கர்ப்பம் எதனுல் பற்றிக் கொள்ளப்பட்டதாக இருந்து வளர்ச்சி அடைகிறதோ; அதற்கு உல்பம் என்றும் ஜராயு என்றும் பெயர். ஆகையால் தான் மனிதர்கள் மிருகங்கள் எல்லாம் ஜராயுஜங்கள் என்று கூறப்படுகிருர்கள். இந்த நஞ்சு அல்லது உல்பத்திற்கு ஆங்கிலத்தில் Placenta என்று கூறுவார்கள். இதிலிருந்து குழந்தை வெளிவந்தவுடன் இந்துப்பும் நெய்யும் கலந்து தேய்த்துத் துடைத்து நல்ல வெந்நீரினுல் அலம்பி, பிறகு பிரஸவ காலத்தில் ஏற்படும் அதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட சிசுவிற்கு பலா முதலிய உயர்ந்த மூலிகைகளால் தயார் செய்யப்பட்ட தைலங்களைத் தேய்த்துவிட வேண்டும். இவ்விதம் செய்வதால் கர்ப்பத்திலிருந்து பல ஸங்கடங்களுடன் வெளிவந்த சிசுவின் சரீர சிரமங்கள் தீருவதுடன், புதிதாக சரீரத்தில் படும் ஆகாயம், காற்று இவைகளின் எண்ணெய்ப் பசையைக் குறைக்கும் ரூக்ஷ குணங்களால் ஏற்படும் நோய்கள் வராமல் தடுக்க முடியும்.

கர்ப்பத்திலிருக்கும் குழந்தையின் சரீரம் தாயின் சரீரத்தில் ரத்த ஓட்டத்துடன் கூடிய உல்பத்தில் இருந்து வருவதால் எப்பொழுதும் சூடாகவே இருந்துவரும். கர்ப்பத்திலிருந்து வெளிவந்தவுடன் உடனடியாக ஏற்படும் குளிர்ச்சியால் சில சமயம் சரீரம் ஜில்லிட்டுப் போவதும் உண்டு. இவ்விதம் நேர்ந்தால் குழந்தையை சூடான ஜலத்தில் சிலகாலம் வைத்திருந்து சரியான ரக்த ஓட்டம் வந்து சரீரம் சூடானவுடன் எடுத்து நன்ருகத் துடைக்க வேண்டும். பிரஸவ சிரமங்களாலோ வேறு காரணங்களாலோ தாயாருக்கு ஜுரம் ஏற்பட்டிருந்து, அந்த ஜுரம் சிசுவுக்கும் இருப்பதுண்டு. அவ்விதம் இருந்தால் அதை கவனிக்கவேண்டும். இது தாயின் உடல் நிலைமையால் ஏற்பட்டதால் பிரஸவித்த பிறகு தானுகவே தணிந்துவிடக் கூடும். சில சமயம் தொடர்ந்தும் இருக்கக்கூடும். அவ்விதம் ஏற்பட்டால், வேப்பிலை, விஷ்ணுக்கிராந்தி இவைகளைப் போட்டுக் கொதிக்க வைத்த ஜலத்தில் சுத்தமான துணியை நனைத்து ஒத்தடம் கொடுக்கவும்.

தற்கால தர்மாமீட்டரின் அளவுப்படி பிறந்த குழந்தைக்கு முதல் இரண்டுநாட்கள் 99 டிகிரி உஷ்ணம் இருக்கும். பிறகு 99·8 டிகிரி இருக்கும். இது குழந்தைகளுக்கு இருக்கவேண்டிய உஷ்ணமானதால், ஜுரம் இருப்பதாக நினைத்துவிடக் கூடாது. இதற்கு மேல் இருந்தால்தான் காய்ச்சல் இருப்பதாகத் தீர்மானிக்க வேண்டும். 98·5டிகிரிக்குக் குறைவாக இருந்தாலும் கவலைப்படவேண்டும். உஷ்ணம் குறைவாகவே இருந்தால் தணலில் கடுகைப் போட்டுப் புகைக்க வேண்டும். இதனால் பலவிதமான குணங்கள் ஏற்படும். கிருமிகளால் வியாதிகள் உண்டாவதாகக் கூறப்படும் முறையை அனுசரித்து இது மிகவும் நல்ல பலனைக் கொடுக்கும். பிறந்த குழந்தையின் சுவாஸத்தைக் கணக்கிடுவதால் ஹிருதயத்தின் பலாபலத்தையும் ரக்த ஓட்டத்தின் நிலைமையையும் உணரமுடியும். பிறந்தவுடன் குழந்தையின் சுவாசம் ஒரு நிமிஷத்திற்கு முப்பதிலிருந்து அறுபது வரையிலும் இருக்கும், நாடித் துடிப்பு இரண்டு மாதம் வரையிலும் ஒரு நிமிஷத்திற்குச் சுமார் (137) நூற்றுமுப்பத்தேழு இருக்கலாம். மூன்றாவது மாதம் முதல் ஆறாவது மாதம் வரையிலும் (128) நூற்றிருபத்தெட்டு. ஏழாவது மாதத்திலிருந்து ஒரு வயது வரையிலும் சுமார் (120) நூற்றிருபது, ஐந்து வயது வரையிலும் சுமார் (100) நூறு, பத்து வயது புருஷனுக்கு (80) எண்பது, பத்து வயது பெண்ணுக்கு (90) தொண்ணூறு, இது சாதாரண நிலைமையில். ஜுரம் இருந்தால் ஒரு டிகிரி உஷ்ணம் அதிகமிருந்தால் ஒரு நிமிஷத்திற்கு நாடித் துடிப்பு இருக்கவேண்டிய எண்ணிக்கையை விட (10) பத்து அதிகமாக இருக்கும். பெரியவர்களுக்கு ஒரு டிகிரி உஷ்ணம் அதிகமிருந்தால் நாடித் துடிப்பு (4) நான்கு தடவைகள் அதிகமாக இருக்கும். எந்தவிதத்திலும் வியாதிகள் வராமல் பாதுகாப்பது தான் ஆயுர்வேதத்தின் முக்கிய லக்ஷியம். ஆகையால் பலவிதத்திலும் ஆரோக்கிய நிலைமையையும் அதற்கு மாறான நிலைமையையும் வைத்தியன் பரிக்ஷித்து அறிந்துகொள்ளவேண்டும்.

செயற்கைகளான அபத்தியங்கள் நேராமல் இயற்கையைப் பாதுகாப்பதினாலேயே சரீரத்திற்கு வியாதிகள் அணுகாமல் செய்வதுதான் புத்திமான்களின் கடமையாகும். இவ்விதிகளை சிறு குழந்தைப் பருவம் முதல் அனுஷ்டானத்தில் கொண்டுவருவது பெற்றோர்களின் கடமை. அவ்வழிகளைத் தழுவியே நமது "சிசு பரிபாலனம்" என்னும் வியாசங்கள் அதிகமாக எழுதப்படுவதால் இயற்கையில் சிசுக்களின் சரீரம் இருக்கவேண்டிய நிலைமைகளை வைத்தியர் அல்லாதவரும் அறிந்துகொள்ள நவீனகருவியான தர்மாமீட்டரின் சகாயத்தாலும் நாடித் துடிப்பின் கணக்கைச் சரிப்படுத்தியும் பார்க்கவேண்டும். ஆனால் இதற்காக விடாமல் தர்மாமீடரை வைத்துப் பார்த்துக் கொண்டே இருக்கவேண்டாம். சிசுவின் ஆரோக்கிய நிலைமையில்

சந்தேகம் நேரும்பொழுது தகுதியான வைத்தியர் கிடைக்காமல் போனல் இக்கருவியின் உதவியால் ஒருவாறு நிர்ணயிக்கலாமே தவிர, பல சந்தர்ப்பங்களில் இக்கருவியை நம்பி நாடிசாஸ்திரங்களைப் பயிலாத வைத்தியர்கள் ஏமாற்றமடைந்து வியாதி குணமாகும் தருவாயில் பயந்து அஸாத்யமாகக் கருதி வேறு வைத்தியர்களிடம் தள்ளிவிட்டு அவர்கள் சொஸ்தம் பண்ணினதாகப் பெயர் அடையும்படி நேருவது மிகவும் வருந்தத்தக்க விஷயம். அவ்விதம் பல கேஸுகள் நல்ல நிலைமையில் டெம்பரேச்சர் திடீரென்று குறைந்ததைக் காரணமாகக் கொண்டு கைவிடப்பட்டு நமது வைத்தியத்திற்கு வந்து, நாடியின் தோஷ கதியை பரிசோதித்து வாதம் சுத்தமாகப் பிரிந்து நடப்பதால் வியாதி விலகிய நிலைமை என்பதை உணர்ந்து, இயற்கையிடம் ஒப்படைக்கப் படுவதாலேயே நிர்ப்பயமாகக் குணமடைந்து வருவது நமது அனுபவத்தில் ஏராளமாக இருக்கிறது.

ஆனால் எவ்வளவு கெட்டிக்கார வைத்தியனுக இருந்தாலும் குழந்தைகளின் நாடியை நிர்ணயிப்பது மிகவும் சிரம ஸாத்யம். ஆகையால் தர்மாமீட்டர் சில சமயங்களில் மிகுந்த ஏமாற்றத்தை விளைவிக்கக் கூடியதாக இருந்தபோதிலும், அதன் உதவியால் மட்டும் நிற்காமல், இதர குறிகளையும் நாடித் துடிப்பையும் ஒத்துப் பார்த்து ஊஹித்துத் தீர்மானிக்கவேண்டும். கக்குவது, அழுவது, விளையாடுவது போன்ற பல குறிகளைக்கொண்டு தான் குழந்தைகளின் ஆரோக்கியத்தை நிர்ணயிக்க வேண்டும். குழந்தைகளின் சரீரம் மிகவும் நுட்பமானதாலும், வயதானவர்களைப் போல் வாயால் சொல்லித் தெரிவித்துக் கொள்ளவோ ஜாடைகள் காண்பிக்கவோ முடியாததனுலுந் தான் குழந்தை வைத்தியம் மிகவும் ஊஹத்தினுலேயே செய்யவேண்டியதால் தனிப்படப் பயின்ற புத்திமான்களான வைத்தியர்கள் தான் அவ்வழியில் இறங்கவேண்டுமென்றும் மஹரிஷிகள் காயசிகித்ஸையிலிருந்தும் தனிப்பட குழந்தை வைத்தியத்தைப் பிரித்துக் கூறினுர்கள். பெரியவர்களுக்குச் செய்யப்படும் சிகித்ஸைகளே குழந்தைகளுக்கும் செய்யப்படுகிற போதிலும் வியாதியைக் கண்டுபிடிப்பதிலும், வியாதியின் நிலைமையை நிர்ணயிப்பதிலும், மருந்துகளின் மாத்திரையைத் தீர்மானிப்பதிலும் மிகுந்த அனுபவமும் புத்திசக்தியும் தேவை என்பது, பரம்பரையாக சில மருந்து எண்ணெய் முதலியதுகளை மட்டிலும் வைத்துக்கொண்டு எல்லாவற்றிற்கும் அதையே கொடுத்துவரும் பால வைத்தியர்களைத் தவிர சாஸ்திரீயமான வழியில் செல்லும் பண்டிதர்களுக்கு நன்ருகத் தெரியவரும். ஆகையால் இவ்விஷயத்தில் சாஸ்திர ரீதியாக ஆராய்ச்சி வழிகளில் வைத்தியர்கள் கவனம் செலுத்தவேண்டுமென்று வற்புறுத்தப் படுகிறதேயல்லாமல், மிகவும் சக்திவாய்ந்த பரம்பரை மருந்துகளைச் சிறிதும் குறைகூறுவதாக எண்ணக்கூடாது. வியாதிகளின் நிதானம்

கூட இல்லாமல், வைத்தியம் செய்யத் தகுதியான அப்பேர்ப்பட்ட சித்தௌஷதங்களை தலைமுறை தலைமுறையாகக் காப்பாற்றி வந்திருக்கும் வைத்தியர்களுக்கு நமது தேசம் மிகவும் கடமைப் பட்டிருப்பதாகும்.

எவ்வளவு அறிவாளியாக இருந்தபோதிலும் நிர்ணயிக்கமுடியாத நிலைமை மனித சக்திக்கு மிகவும் சாதாரணம். ஆகையால் அந்த மாதிரி சந்தர்ப்பத்தில் வியாதியை நிர்ணயிப்பது வரையிலும் வைத்தியர் தாமதித்தால், நோயும், உயிரும் காத்திருக்காது. அவ்விதமான நிலைமையில் மிகவும் சக்திவாய்ந்த உயர்ந்த சித்தௌஷதங்களை உபயோகித்து நிலைமையை சமாளித்துப் பிறகு அம்மாதிரி நிலைமை ஏற்படாமல் முன் ஜாக்கிரதையாக இருப்பதே மேதாவிகளின் கடமை. ஆகையால் இவ்விடம் குறிப்பிட்டதும், இனிமேல் குறிப்பிடப் போவதுமான விஷயங்களைக் கவனித்து, குழந்தைகளின் நல்ல நிலைமையையும் சீர் கேடான நிலைமையையும் அறிந்துகொள்ள வேண்டும்.

பிறந்த குழந்தையின் தொப்புள் கொடியை அனுபவமுடையவர்கள் அறுக்கவேண்டும். அவ்விதம் அறுத்த இடத்தில் புண் காய, கோஷ்டம் என்னும் மூலிகையால் தயார் செய்த தைலத்தைப் பிரட்ட வேண்டும். பிறகு சுகந்த திரவியங்கள், க்ஷீர விருக்ஷங்களின் பட்டை (க்ஷீர விருக்ஷங்கள்— அத்தி, இச்சி, ஆல், அரசு) முதலியவற்றால் தயார் செய்யப்பட்ட ஜலத்தில், வெள்ளி, தங்கம் முதலியதைப் பழுக்கக் காய்ச்சித் தோய்த்து ஸுகோஷ்ணமாகச் செய்து, குழந்தைக்கு ஸ்நானம் செய்து வைக்கவேண்டும். பிறகு குழந்தையின் ஆஸனம் முதலிய துவாரங்கள் சரியாக இருக்கின்றனவா என்று கவனிக்க வேண்டும்.

சில குழந்தைகளுக்கு வாய், கண் கூட மூடியே பிறப்பதுண்டு. அவ்விதம் நேர்ந்தால், அதற்காக ஏற்பட்ட சஸ்திரங்களால் அந்த இடத்தைச் சரியாகக் கிழித்துவிட வேண்டும். நமது அனுபவத்தில் ஆஸனவாய் திறக்காமல் பிரஸவித்த பிறகு ஆயுதத்தால் திறந்துவிட்டு, குழந்தை சௌக்கியமாக இருந்து வருகிறது. ஆகையால் இம்மாதிரி பிரஸவத்தில் தகுந்த பரிஹாரம் தேடுவதால் உயிருக்குச் சேதமில்லாமலும், அழகு கெடாமலும் காப்பாற்றும் முறை ஆயுர்வேதத்தில் நன்றாகக் கூறப்பட்டிருக்கிறது.

பிறகு குழந்தையின் மல மூத்திரங்களை சரியாகக் கவனிக்கவேண்டும். பிறந்து இரண்டு நாட்கள் வரையிலும் மலம் கறுப்பாகவும், கபம் பித்தம் கலந்தும் இருக்கும். மூன்றாவது நாள் தாய்ப்பால் குடிக்கத் துடங்கினால் மலம் தினம் இருவேளைக்குக் குறையாமல் கழியும். சிறுநீர் ஒருநாளைக்கு இருபது தடவைகள் இறங்கும். ஏழு

நாள் வரையிலும் ஒரு நாளின் சிறு நீர் அளவு சின்னப்படியில் சுமார் அரைக்கால்படி— அதாவது சுமார் 4 அவுன்ஸ்; ஏழாவதுநாள் முதல் சுமார் அளவு கால்படி அல்லது 8 அவுன்ஸ் சொல்லலாம். குழந்தை பிறந்து மூன்ருவது அல்லது நான்காவது நாள் தாய்ப்பால் சுரப்பதாக சாஸ்திரம் கூறுகிறது. सिराणां हृदयस्थानां विवृतत्वात्प्रसूतितः— तृतीये हि चतुर्थे वा स्त्रीणां स्तन्यं प्रवर्तते। அதாவது பிரஸவத்திலிருந்து, தாயின் ஹ்ருதயத்திலிருக்கும் பாலைச் சுரக்கும் குழாய்கள் விரிந்து கொடுத்து அவற்றின் வழியாகத் தாய்ப்பால் உற்பத்தியாகி பிரஸவித்த மூன்ருவது அல்லது நான்காவது நாள் வெளிப்படுகிறது. இவ்விதம் மூன்று நாள் வரையிலும் சிசுவிற்கு ஆகாரம் இல்லாமல் போவதால் வேறு எதைக் கொடுப்பது என்று பலர் யோசிக்கக் கூடும். நமது யோசனையை விட இயற்கையின் ஏற்பாடு மிகவும் முன் யோசனையுடன் இருக்கிறது. சிசு பிறந்து இரண்டு நாட்களுக்குத் தேவையான ஆகாரம் பிரஸவிக்கும் பொழுதே அதன் வயிற்றில் காப்பாற்றி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆகாரங்கள் ஜீரணமாகி பசி ஏற்பட்டு புது ஆகாரம் அபேக்ஷிக்க சுமார் மூன்று நாட்கள் பிடிக்கிறது. அதற்குச் சரியாகத் தாய்க்குப் பால் சுரந்து விட்டால் போதுமானது. அதற்குமுன் பசுவின் பால் முதலியதைக் கொடுத்து இயற்கையைக் கெடுத்து விடுவது மிகவும் பாதகம் விளைவிக்கக் கூடிய விஷயம்.

ஆனல் இவ்விடத்தில் ஓர் சந்தேகம். குழந்தை பிறந்து இரண்டு நாட்கள் கழித்துத் தான் தாய்ப்பால் சுரக்குமேயாகில் சரகாசார்யர் ஏன் பிறந்தவுடன் குழந்தைக்கு ஸ்தன்யம் கொடுக்கும்படி உபதேசிக்கிருர். பாலில்லாத முலையைக் குடிப்பதால் என்ன பயன்? பால் குடிக்கக் கற்றுக்கொடுக்க இவ்விதம் செய்யச் சொல்லுகிருரா? என்று நினைக்கக் கூடும். ஆனல் சரகாசார்யரா சிறு பிரயோஜனங்களைக் கருதி ஓர் காரியம் சொல்லுகிறவர்? மற்ற ஆசார்யர்கள் அறிந்து கொள்ளாத ஓர் அபூர்வ விஷயத்தை ஸ்ரீ சரகாசார்யர் அறிந்தே அவ்விதம் கூறுகிருர். நவீன ஆராய்ச்சிக்காரர்கள் கூறும் விஷயத்தையே ஸ்ரீ சரகர் உபதேசிக்கிருர். பிரஸவித்து மூன்றுநாட்கள் வரையிலும் பால் இல்லாமல் இருந்தபோதிலும் முலை கொடுக்கவேண்டும் என்றும் நவீனர் கூறுகிருர்கள். அதன் பிரயோஜனம் என்னவென்ருல் முலையில் பால் சுரக்காமல் இருந்தபோதிலும் வெளுப்பாகவும் கட்டியாகவும் ஓர் திரவம் முலையிலிருந்து குறைந்த அளவில் வெளிவரும். அதில் கொலாஸ்ட்ரம் (Colostrum) என்னும் ஓர் சத்து இருக்கிறது. அது குழந்தையின் மலப்பையை சுத்தம் செய்வதுடன் குழந்தையின் ஆரோக்யத்திற்கும் இன்றியமையாதது. தவிரவும் தாயின் முலையை குழந்தை எவ்வளவுக்கெவ்வளவு உறிஞ்சிக் குடிக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு கர்ப்பப் பை சுருங்கி கெட்டியாகிறது.

ஆகையால் தாய்ப் பால் இல்லாமல் இருந்தபோதிலும், பிறந்தவுடனேயே குழந்தைக்கு முலை கொடுப்பது நமது சரகாசார்யரின் உபதேசத்தை அனுசரித்தே நவீனர்களும் சொல்லுகிறார்கள்.

பிறந்தவுடன் குழந்தைக்குச் செய்யவேண்டிய ஸ்நானவிதிப்படி ஸ்நானம் செய்துவைத்து நன்றாகத் துடைத்து, பிறகு தாயின் முலைக் காம்பை நன்றாகத் தேய்த்து சூடான ஜலத்தால் அலம்பி, பிறகு முதலில் தேன், நெய் இவைகளைக் கலந்து கொஞ்சம் கொடுக்கவேண்டியது. பிறகு வலது முலையை குழந்தைக்கு முதலில் குடிக்கக் கொடுக்கவேண்டும். இந்த கொலாஸ்ட்ரம்(Colostrum) என்னும் சத்துடன் கூடிய கட்டித் திராவகத்தை இரண்டு நாட்கள் வரையிலும் குழந்தை குடிப்பதால் மலச்சிக்கல் இல்லாமல் இருப்பதற்கு வேறு விளக்கெண்ணெ முதலியதை கொடுக்கவேண்டிய தேவை இல்லை என்று ஏற்படுகிறது. பிற்காலத்தில் வந்த வாக்படாசார்யர் முதலியவர்களும் இவ்விஷயங்களை அறிந்து கொள்ளாமல் இல்லை. ஏனென்றால் தாய்ப்பால் இல்லாத குழந்தைகளுக்கு பால் கொடுக்க தாதியை ஏற்பாடு செய்யச் சொல்லும் பொழுது முதல் நாளிலிருந்தே தாதியின் பால் கொடுக்கும்படி சொல்லவில்லை. ततः प्राङ्निषिद्धस्तनस्यास्य— என்னும் அஷ்டாங்க ஹிருதய ஸ்லோகத்திற்கு முதல் மூன்று நாட்கள் தாதியின் பால்கூட கொடுக்கக் கூடாது என்று பொருள் ஏற்படுகிறது. இப்பொருளுக்கு ஒத்த கேரளி வ்யாக்யானத்தை இவ்விடம் குறிப்பிடுவோம். ततः त्रिदिनानन्तरं—प्राक् चतुर्थदिनात्प्राक् निषिद्धस्तनस्य निवारितस्तन्यस्य दिनत्रये धात्री स्तन्यविधानमप्य कृत्वात्रिकालं घृतपानमात्रोक्त्यैव त्रिदिनं स्तन्यनिषेधोऽनुमीयते— என்று. ஆகையால் மூன்று நாட்கள் முலைப்பால் ஆகாரம் தேவையில்லை என்று (இந்த நிஷேதத்திலிருந்து) நன்றாகத் தெரிகிறது. ஆனால் சரகாசார்யரின் கருத்தை அனுசரித்து தாதியின் பால்கூட மூன்று நாட்கள் பொறுத்தே ஆகாரமுறையில் உபயோகிக்கவேண்டியதா யிருந்தபோதிலும், தாயாரின் முலையை முன் குறிப்பிட்ட இரண்டு காரணங்களால் முதல் நாள் முதற்கொண்டே கொடுக்கவேண்டும் என்று தெளிவாகிறது. இதற்கு ஆதாரமான சரகாசார்யரின் வாக்கியத்தை இவ்விடத்தில் குறிப்பிடுவதுடன் இவ்வியாசத்தை நிறுத்திக்கொள்வோம். मधुसर्पिषी मन्त्रोपमंत्रिते यथान्यायं प्रागशितुं दद्यात् स्तन्यमतऊर्ध्वं तेनैव विधिना दक्षिणं पातुं पुरस्तात्प्रयच्छेत्— தாதியின் பாலில் கொலாஸ்ட்ரம் (Colostrum) என்னும் சத்து இல்லாததனாலும், தாதியின் கர்ப்பப் பை சுருங்கிக் கெட்டிப்படவேண்டிய அவசியம் இல்லாததாலும் வாக்படர் ஆகாரரூபமான பாலின் உபயோகம் மூன்று நாட்கள் கழித்துத்தான் என்பதைத் தெளிவு படுத்தி, பால் உற்பத்தியாகாத தாயின் முலையை முன் குறிப்பிட்ட காரணங்களுக்காக குழந்தை குடிப்பதைத் தடுக்கவில்லை என்பது கருத்து.

# "திரவிய குண மஹிமை"

[ஸ்ரீ N. வெங்கடேச சர்மா, ஆயுர்வேத சிரோமணி, திருச்சி.]

## சுக்கு. (शुण्ठी)

நாம் பிரதி தினமுபயோகிக்கும் பொருளில் ஒன்ருயும், வைத்ய உலகில் ஸகல முறை வைத்யர்களாலும் ஔஷத யோகங்களில் சேர்க்கப்படுவதாயு மிருக்கும் பிரஸித்த முதல் திரவியம் 'சுக்கு' என்பதாகும். இதை யறியாதவர் யாருமிரார். சுக்கு பகவத் ஸ்வரூபமென்றும், திரிகடுகத்தின் முதல் மருந்தென்றும், ஆயுர்வேத வைத்யர்களின் கையிலெடுக்கும் பிரதான ஆயுதமாயும் ஸகல ரோக ஸஞ்ஜீவியாயு மிருப்பதாக நூல்கள் கூறும். இது பிரதி வீட்டிலும் வெகு காலமாக தொன்றுதொட்டு வருஷாந்தரத்துக்குச் சேகரித்து வைக்கப்பட்டு பிரதம சிகித்ஸா மருந்தாகவும் (First aid) குடும்ப ஔஷதமாகவும் உபயோகப்பட்டு வந்திருக்கிறது. நம் நாட்டில் நூற்றுக்கு எண்பது பேர் வரை இக்காலத்திலும் கிராமங்களில் ஸ்திரீகளுக்கு பிரஸவ மருந்தென்றும் நடகாயமென்றும் உபயோகித்து வரும் ஔஷத முறையில் சுக்கு மிக பிரதானமாய் சேர்க்கப்படுவது யாவருமறிந்ததே. இந்த ஸம்பிரதாயம் வெகு காலமாக நம் நாட்டில் ஊன்றியிருக்கிறது. இதனால் பிரஸவித்த ஸ்திரீகளின் சரீரம் எவ்வித வியாதியும் வராமல் தடுக்கப்பட்டு, அக்னி தீபன முண்டாகி ஸ்தன்யமும் நன்கு சுத்தமாக்கப்பட்டு, சரீர தார்ட்யமும் உண்டாவதாக அநுபவ மிகுந்த ஸ்திரீகள் கூறுகின்றனர்.

சுக்கு பச்சையா யிருக்கும் போது 'இஞ்சி' (आर्द्रकम्) யென்று வழங்கப்படுகிறது. இது சிறிய செடியாய் மஞ்சள் செடியை போன்றிருக்கும். அடியிலுள்ள கிழங்கு 'இஞ்சி' யாகும். இஞ்சியைக் காயவைத்து 'சுக்கு' என்று கடைகளில் விற்கப்படுகிறது. இஞ்சியை வென்னீரில் ஊறவைத்து மேல் தோலை நீக்கி பக்வமாய் காயவைத்து விற்கப்படுகிறது. மேல் தோலை நீக்காதது கருப்பாயிருக்கும். தோலை நீக்கியது நல்ல வெளுப்பா யிருக்கும். அழுத்தமாய், பளுவாய் காரமா யிருப்பது நல்ல சரக்கு. லகுவாய், உளுத்தாற் போலிருப்பது மட்டச் சரக்கு. சுக்கு, மஹௌஷதம், நாகரம், விச்வபேஷஜம், விச்வௌஷதம், சிருங்கபேரம், ஆர்த்ரகம் இவை யாவும் பர்யாய பதங்களேயாகும். (ஓரினச் சொற்களாம்.)

## சுக்கின் குணங்கள் :

கடு (உறப்பு) ரஸம், உஷ்ண வீர்யம், பிரபாவத்தால் விருஷ்யம் (Aphrodisiac) என்னும் குணமுள்ளது. சோபம், பாண்டு, கபம், பற்பல வாத ரோகங்கள், அக்னி மாந்த்யம், சிரோ ரோகங்கள், தலைவலி, மண்டையிடி, மண்டைக் குத்தல், வயிற்று வலி, வயிறு ஊதல், சூலை, கைகால் உளைச்சல், குத்துவலி முதலிய பற்பல வியாதிகளை நீக்க வல்லது.

## இஞ்சியின் குணங்கள் :

இதுவும் சுக்கைப்போன்ற குணமுள்ளதாயினும் காரமுள்ளதும், பாகத்தில் சீதவீர்யமுள்ளதும், ஹிருத்யம், பித்தஹரம், ஸ்வர்யம், ருச்யம், தீபனம் என்னும் விசேஷ குணமுள்ளதாகவும் கூறப்படு கிறது. நீரை நன்கு பிரிக்கிறது. வீக்கத்தை வடிக்கிறது. நாக்குக்கு நல்ல ருசியை உண்டாக்குகிறது. மலச்சிக்கலை உடன் நீக்கு கிறது. இதற்கு ருச்யமென்னும் குணம் விசேஷமா யிருப்பதால் தான் நம் நாட்டில் 'இஞ்சி ஊறுகாய்' போட்டு வைத்துக்கொண்டு வருஷம்பூராவும் உபயோகிப்பது வழக்கமாயிருக்கிறது. இதற்கு ஆதாரமாக ஆயுர்வேத சாஸ்திரங்களிலும் "भोजनाग्रे सदा पथ्यं लवणार्द्रकभक्षणम्" உப்பிலிட்ட இஞ்சி உணவினிறுதியில் எப்பொழுதும் பத்தியம் எனக் கூறப்பட்டிருக்கிறது. மனிதர்களுக்கு பலவிதத்தில் திருப்தியை உண்டுபண்ணுவது போல் தேவதைகளுக்கும் பித்ருக்களுக்கும் கூட திருப்திகரமானதெனத் தெரிகிறது. எங்ஙனமெனில், நம் தேசம் பூராவும் ஸகல ஹிந்து மதஸ்தர்களும் உத்தராயண புண்யகாலத்தில் பொங்கல் பண்டிகை தினம் சூரிய பகவானை ஆராதிக்கையில் பொங்கல் பானைக்கு இஞ்சி மஞ்சள் கொத்து சுற்றி தான் பூஜிக்கிறார்கள். மறுதினம் மாட்டுப் பொங்கல்–கோபூஜைக்கும் இவ்விதமே உபயோகிக்கப் படுகிறது இன்றும் வழக்கமா யிருக்கிறது. ஆதலின் இது *பூஜார்ஹமான வஸ்துவென்றும் தெரிகிறது. அவ்விதமே சிராத்தாதி பித்ரு காரியங்களில் முக்கியமாய் இஞ்சியைச் சேர்த்துக் கொள்கிறார்கள். இதனால் பித்ரு ப்ரீதிகர வஸ்து வென்றும் தெரிகிறது. இனி ஸாதாரணமாய் பற்பல வியாதிகளில் வைத்யரல்லாத பாமர ஜனங்கள் உபயோகிக்கும் முறைகளையும் அதனால் ஏற்படும் நற்பலன்களையும் கூறுவோம்.

---

*மகர ஸங்கிராந்தி பூஜையில் மஞ்சள் கிழங்கு மட்டும் கொத்துடன் வைப்பது வழக்கமென்று நினைத்துக் கொண்டிருந்தோம். இஞ்சிக் கொத்தும் வைப்பது சில இடங்களில் வழக்கத்திலிருப்பதாக இவ் வுபந்யாஸத்திலிருந்து தெரிகிறது.

—ஆசிரியர்.

1. ஜ்வரங்களில் ஆட்டுசதை, கண்டை சதை வலி ஏற்படும் போது இஞ்சியை நன்கு அரைத்து கொதிப்பித்து கனமாய்ப் பூச உடனே வலி வேதனை நீங்கி ஸௌக்கிய மேற்படுகிறது.

2. கீல்வாயு, முடக்கு வாயு, அண்டவாயு, இடுப்புப் பிடிப்பு, அவ்விடத்தில் தங்கிய வாயுக் கோளாறு, யானைக்கால் வீக்கம், நெறி வலி முதலிய பற்பல வாயுக் கோளாறுகளில் முன் கூறியபடியே கனமான லேபமானது (பூச்சானது) அதிசயிக்கத் தக்க குணமளிக்கிறது.

3. பலவித மயக்கங்களிலும் (மூர்ச்சா ரோகங்கள்) அபதந்திரக (Hysteria) த்திலும் இஞ்சியை நசுக்கி சாறு பிழிந்து அச்சாற்றை இரு மூக்கிலும் விட்டு, கண்களிலும் மைபோல் இட உடனே தன் பிரக்ஞை ஏற்பட்டு தெளிவடைகிறது.

4. மலபந்தம், அஜீர்ணம், வயிற்றுப்புஸம், வயிற்றிரைச்சல் முதலிய கோளாறுகளில் இஞ்சியை நசுக்கிச் சாறு பிழிந்து உள்ளுக்கு அரை அவுன்ஸ் வரை கொஞ்சம் தேனும் சேர்த்துக் கொடுக்க விசேஷ குணமுண்டாகக் காணலாம்.

5. இஞ்சியை வென்னீரில் ஊறவைத்து இடித்து சர்க்கரைப் பாகிலிட்டு கெட்டியான பக்வத்தில் தயாரிக்கப்படும் ஓர்வித முறை "இஞ்சி முறபா" எனப்படுகிறது. இதை வாத பித்தக் கோளாறுகளிலும், அரோசகத்திலும் உபயோகிப்பதுண்டு.

6. இஞ்சியை நசுக்கி சாறு பிழிந்து அதில் சர்க்கரை அல்லது கற்கண்டு கலந்து காய்ச்சி தேன் போன்ற பதத்தில் ஈரமில்லாமலிருக்கும்படி எடுத்து வைத்துக் கொள்வது "இஞ்சி ஷர்பத்" எனப்படுகிறது. இது 2 முதல் 5 டீஸ்பூன் வரை மேற்கண்ட வியாதிகளில் உடனே உபயோகிக்க வெகு நல்ல குணமளிக்கிறதாகத் தெரிகிறது, இதைத் தயாரித்து கையில் வைத்துக் கொண்டால் திடீரென்று "ஸமய ஸஞ்ஜீவி" யாக உபயோகிக்கலாம்.

7. பச்சை இஞ்சியை நசுக்கி பாலில் ஊறவைத்து பின் காயவைத்து இடித்து வஸ்திரகாளனஞ் செய்து வைத்துக் கொள்ள 'இஞ்சிச் சூர்ணம்' எனக் கூறப்படுகிறது. இதைத் தயாரித்து வைத்துக் கொண்டு அவசர ஸமயங்களில் வீசம் முதல் அரைக்கால் தோலா எடை உபயோகிக்க பலவித வாத, பித்த, கப ரோகங்கள் உடனே சமனமாகின்றன.

8. வயிற்றுவலி, வயிற்றில் நாக்குப்பூச்சி வலி உபத்ரவங்கள், மார்புவலி, இவற்றில் மேற்படி இஞ்சித் தூளுடன் ஸோடா உப்பு (Soda Bicarb) ஸமபாகம் சேர்த்து சாப்பிட்டு மேலே வென்னீர் சாப்பிட உடனே குணமுண்டாகக் கண்டதுண்டு.

9. பித்த ஸம்பந்தமான வியாதிகளிலும், மயக்கம், தலைசுற்றல், வாந்தி, முதலியவற்றிலும் இஞ்சியை துண்டு துண்டாக நறுக்கி அத்துடன் இந்துப்பு, ஜீரகமும் சேர்த்து, எலுமிச்சம்பழச் சாற்றில் ஊற வைத்து காய்ந்தபின் பாட்டிலில் எடுத்து வைத்துக்கொண்டு நாலைந்து துண்டுகள் வீதம் காலை, மாலை, இரவு ஆகாரத்துக்கு முன் உபயோகிக்க வெகு மெச்சத் தக்க குணமேற்படுவதாகத் தெரிகிறது.

10. ஆகாரங்களில் விசேஷ ருசியை உண்டுபண்ணுவதற்காகவும், நன்கு ஜீர்ணிப்பதற்காகவும் இஞ்சி ஊறுகாய், இஞ்சி துகையல் முதலிய வியஞ்சனங்கள் உபயோகிப்பதும் சிலாக்யமான வழக்கம்.

இவ்விதம் பல்வேறு விதத்தில் ஔஷத ரூபமாகவும், ஆகார ரூபமாகவும், தேவதாராதனை ரூபமாகவும் உபயோகப்படும் மஹிமை பொருந்திய திரவியம் இதற்கிணையாக வேறு ஒன்றுமில்லை யென்றே சொல்லலாம்.

இனி சுக்கைப் பற்றிய குண மஹிமைகளைச் சுருக்கமாய் கவனிப்போம்:—

சுக்கின் ரஸ, வீர்ய, விபாக, பிரபாவாதிகளை இக்கட்டுரையின் ஆரம்பத்திலேயே கூறினோம். இனி ஸாதாரணமாய் பொது ஜனங்கள் உபயோகிக்கும் முறையும் அதன் குணங்களையும் விளம்புவோம்.

1. பொதுவாக உடம்பில் கடுப்பு, வலி ஏற்படும்போது ஜ்வராதிகளில் சுக்கு கஷாயம் அல்லது சுக்குத் தட்டிப் போட்டு காய்ச்சின வென்னீர் சாப்பிடுவது நம் தேசத்தில் ஸர்வ ஸாமான்யம். இவ்வித உபயோகத்தினாலுண்டாகும் நற்குண மஹிமையை அறியாதவரிரார்.

2. ஜ்வரங்களில் உபயோகிக்கும்படி ஆயுர்வேத சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கும் "ஷடங்கபானீயத்தில்" சுக்கு முக்யமாய் சேர்க்கப்படுகிறது.

3. வாதரக்தம் (Gout) என்னும் வியாதியில் சுக்கு கஷாயத்தில் விளக்கெண்ணை, பசும்பால் சேர்த்து கொடுத்துவர நற்குண மேற்படுவதாகத் தெரிகிறது. இவ்விதமே ஆமவாதம் (Rheumatism) என்னும் வியாதியிலும் உபயோகிக்க நற்குண மேற்படுவதாகக் கூறுவர்.

4. ஸ்திரீகளுக்கு மாதவிடாய் ஸமயத்தில் ஏற்படும் பொறுக்க முடியாத வலி வேதனைகளிலும், சிக்கலிலும், சுக்கு, வெல்லம், கருஞ்சீரகம் இவற்றை ஒன்றுகூட்டி அரைத்து மெழுகுபோல் செய்து நெல்லிக்காயளவு காலை—மாலை 3 தினம் உபயோகிக்க உடனே குண மேற்படக் கண்டதுண்டு.

5. வியாதிஸ்தர்களுக்கு உபயோகிக்கும் யவாகூ, மண்டம், பேயா, விலேபி என்னும் கஞ்சி ஆகார விசேஷங்களுடன் சுக்கு சேர்த்து உபயோகிப்பதால் ஸுலபமாய் ஜீர்ணமாகி ஆரோக்யத்தை கொடுக்கிறது.

6. புராண ஜ்வரங்களில் பாலில் சுக்கை தட்டிப் போட்டோ துணியில் முடிந்து போட்டோ விதிப்படி காய்ச்சி மேற்படி க்ஷீரத்தை ரோகிக்கு கொடுக்க வெகு சீக்கிரத்தில் ஆரோக்கியத்தையும் இழந்த பலத்தையும் முன்போலடைகிறுன்.

7. அநேக ஔஷதங்களுக்கு சுக்கு வென்னீர் அல்லது இஞ்சி ஸ்வரஸம் அநுபானமாக கொடுக்கப்பட்டால், மருந்துகளின் வீர்யம் பன்மடங்கு அதிகமாவதுடன், வெகு சீக்கிரத்தில் மருந்துகள் வேலே செய்யத் தொடங்குகிறது.

8. யக்ருத், பிலீக (மண்ணீரல், கல்லீரல் கட்டிகளில்) வீக்கங்களில் சுக்கை நவச்சாரம், தேவதாரு இவற்றுடன் கலந்து கோமூத்ரத்தை விட்டரைத்து மேலே அப்பாகங்களில் பூச வீக்கமும் குறைந்து குணமேற்படக் கண்டதுண்டு.

9. Hysteria (அபதந்திரகம்) மூர்ச்சா ரோகங்களிலும் சுக்குத் தூளை மூக்கிலிட்டு ஊத உடனே பிரக்ஞை உண்டாகி எழுந்திருக்கக் கண்டதுண்டு. இவ்விதமே சுக்கை அரைத்து கண்களிலும் மை போல் தீட்டுவதும் மேற்படி வியாதிகளில் மேற்கூறிய குணத்தை செய்யும்.

10. நரம்பு ஸம்பந்தமான வியாதிகளிலும் (Nervous complaints) சுக்கின் எவ்வித உபயோகமும் விசேஷ குணமுண்டாக்குவதாகத் தெரிகிறது.

11. சூடான அன்னத்தில் சுக்குப் பொடியுடன் பொடி செய்த மிளகு, ஜீரகம், உப்பு இவற்றையும் சேர்த்து நெய்யும் விட்டு பிசைந்து சாப்பிட, நல்ல ருசியாயிருப்பதுடன் வெகு எளிதில் ஜீர்ணமாகி வயிற்றுப்புஸம், வேதனை முதலியவைகளை நிவ்ருத்திக்கிறது.

12. நல்லெண்ணெயில் சுக்கு அல்லது இஞ்சி தட்டிப் போட்டு காய்ச்சி தேய்த்து அப்யங்கம் செய்துவர எண்ணெயினு லுண்டாகும் எவ்வித துர்குணமுமேற்படாததுடன் ஸுகுமார சரீரத்தையும், தார்ட்யத்தையும், காந்தியையு முண்டுபண்ணுகிறதாகக் கருதி அநேகர் இம்முறையைக் கையாண்டு வருவதாகத் தெரிகிறது.

13. ஸாதாரண ஆங்கில வைத்தியத்தில் மிகப் பெருமையாய் கொண்டாடி உபயோகப் பட்டுவரும் Carminative mixtureக்கு இருக்கும் குணத்திற்கு நம் சுக்கு கஷாயத்தின் குணங்கள் எவ்விதத்திலும்

குறைந்ததல்ல என்பது பலரின் அபிப்பிராயம். இக்காலத்திலும் கிராமங்களிலிருக்கும் பெரும்பாலும் ஸகல ஜாதி மத மக்களும், நகரங்களில் பண்டைகால மனிதர்களும், சுக்கின் மஹிமையையும் எண்ணற்ற நற்குணங்களையும் அநேகம் தடவை பிரத்யக்ஷமாய் அநுபவித்து அறிந்திருக்கின்றனர். இவ்விதமாக பெரும்பாலும் எல்லாவித வியாதிகளிலும், எல்லோராலும் உபயோகிக்கப்படுவதால் தான் இதற்கு "विश्वौषधम् – விச்வௌஷதம்" என ஆயுர்வேத நூல்களில் கூறப்பட்டது. இந்த வியாதிக்கு உதவும், இதற்கு உதவாது என்ற நியமமின்னியில் பலவிதமான உபயோகங்களும், பயன்களும் மஹிமையும் ஒருமிக்க பெற்றிருப்பதால் "மஹௌஷதம் (महौषधम्)" என்றும் கூறப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

இங்ஙனம் ஒரு திரவியத்தைக் கொண்டு பல வியாதிகளை போக்கக்கூடிய பெருமை நம் நாட்டு ஔஷத திரவியத்துக்கும், நம் ஆயுர்வேத முறைக்குமே இயற்கையாய் அமைந்திருக்கிறதே தவிர இதர அன்னிய நாட்டு திரவியங்களுக்கோ, மருந்துகளுக்கோ இருப்பதாகத் தெரியவில்லை. இதை யறிந்தே முக்காலமறிந்த சரகாசாரியாளும்

"यस्मिन् देशे हि यो जातः तज्जं तस्यौषधं हितम्"

எவன் எத்தேசத்தில் பிறந்தானோ அவனுக்கு அத்தேசத்திய ஔஷத திரவியங்கள் தான் நன்மை பயக்கவல்லது என்று நன்கு விளக்கியிருக்கிறார்கள். ஆகையால் ஆப்தர்களாயும், தீர்க்க தரிசிகளாகவுமுள்ள மகரிஷிகளால் யோக பலத்தால் நன்கு ஆராய்ந்து அறிந்து ஸுலபமாக நூல்களில் விஸ்தரித்து கூறப்பட்டிருக்கும் திரவியகுண மஹிமைகளை படித்தறிந்தும் உபயோகித்துப் பார்த்தும் பிரத்யக்ஷமான சௌக்ய பலனை அடைவதைக்காட்டிலும் விபரம் தெரியாததும் உண்மையில் நிரந்தர குணமளிப்பதில் ஸந்திக்தமானதும் நம் சாஸ்திரத்துக்கும் பூர்வஸம்பிரதாயத்துக்கும் விருத்தமானதுமான அன்னிய நாட்டுச் சரக்குகளைத் தேடி அலைவது அவசியமில்லை யல்லவா? ஆகையால்தான் இன்றும் பண்டைகாலத்து மனிதர்கள் பலர் கிராமங்களிலும், நகரங்களிலும் மேற் சொன்ன கொள்கையையே முக்கியமாய் கடைபிடித்தவர்களாய் கொண்டு அந்நிய நாட்டு மருந்துகளை கனவிலும் கருதாது நம்மைவிட எவ்வளவோ நல்ல திடகாத்ர சரீரிகளாயும், தீர்க்காயுளுள்ளவர்களாயு மிருக்கிறார்களென்று சொல்வது மிகையாகாது.

"तदेव युक्तं भैषज्यं यदारोग्याय कल्पते"

என்றார் சரகர். அதாவது எது உண்மையில் ஆரோக்யத்தை தரவல்லதோ, அதுவே உத்தமமான ஔஷதம் என்பதாகும்.

இவ்வித மஹிமை பெற்ற சுக்கானது ஆயுர்வேத ஔஷதங்கள் பலவற்றில் பிரதானமாய் சேர்க்கப்படுகிறது. அவற்றுள் மிக்க பிர

ஸித்தி பெற்ற ஔஷதம் ஸௌபாக்ய சுண்டீ (सौभाग्य शुण्ठी) என்ப தொன்றாகும். பிரஸூத ஸ்திரீகளுக்கு எவ்வித வியாதியும் வராமல் தடுப்பதற்கும், உண்டான கிரஹணி, அஜீர்ணம், அதிஸாரம் முதலிய வியாதிகளை குணப்படுத்துவதற்கும் ஸ்தன்யம் சுத்தியாகி விருத்தியாவதற்கும் உபயோகமாகிறது. இதனால் பிறந்த சிசுவுக்கும் எவ்வித வியாதியும் வராமல் தடுக்கப்படுகிறது. இன்னும் கீழ்க்கண்ட பல ஆயுர்வேத ஔஷதங்களில் சுக்கு பிரதானமாய் சேர்க்கப்படுகிறது, அவையாவன :— கனகாஸவம், ஜீரகாத்யரிஷ்டம், அபயாரிஷ்டம், பிப்பல்யாஸவம், லோகாஸவம், வாஸாரிஷ்டம், ஆனந்தபைரவ ரஸம், இச்சாபேதிவடி, சித்ரகாதிவடி, சீதாம்சு ரஸம், ஆர்த்ரகண்டாவலேகம், தாடிமாஷ்டக சூர்ணம், குடபிப்பலி, ஹிங்க்வாஷ்டக சூர்ணம், ஜாதி பலாதி சூர்ணம், பாஸ்கர லவணம், தாலீஸாதி சூர்ணம், ஸுதர்சன சூர்ணம், ஸுகுமார கிருதம், திரிபலாதி கிருதம் முதலியனவாம்.

## முன் பணம் அனுப்பிப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

காலஞ் சென்ற பிரம்ஹஸ்ரீ K. G. நடேச சாஸ்திரிகள் அவர்களுடைய போடோ "வைத்திய சந்திரிகை" யில் வெளியானதைப் பார்த்து சில நண்பர்கள் ஸ்ரீ சாஸ்திரிகளுடைய போடோ விலைக்குக் கிடைக்குமா வென்று கேட்டு எழுதி யிருக்கிறார்கள். ஸ்ரீ சாஸ்திரிகளிடம் அபிமானமுள்ளவர்கள் இதுமாதிரி தனிப்படம் வாங்க விரும்புவது உசிதமே. இவர்களுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக சாஸ்திரிகளின் போட்டோவிற்கு சில அதிக காபிகள் தயார் செய்ய ஏற்பாடு செய்துள்ளோம். கண்ணாடி சட்டம் போடுவதற்கு லாயக்காக அழகிய அட்டையில் ஒட்டிக் கொடுக்கப்படும். போட்டோ காபி ஒன்றுக்கு தபால் சிலவு உள்பட ரூபாய் ஒன்று தானாகிறது.

போடோ தேவையானவர்கள் காபி ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு 1947 ஸெப்டம்பர் 15 தேதிக்குள் மணியார்டர் மூலம் தொகை அநுப்பிப் பதிவு செய்துகொண்டு விடவும். உடனே போடோ அநுப்பப்படும்.

உபகாரியதர்சி,

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
17, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# ஜோதிஷமும், வைத்யமும்

*[பண்டித ஸ்ரீ. P. S. ராமசர்மா, கரூர்.]*

1946–ஏப்ரல் மாத (Vol. 8. No. 4 & 5) சஞ்சிகையின் தொடர்ச்சி.

**[குறிப்பு:— பல அசௌகர்யங்களால் இவ்விஷயம் தொடர்ந்து எழுதமுடியாமல் போனதற்கு வருந்துவதுடன், வாசகர்களையும் விட்டுப்போன விஷயத்தை வெகுநாள் கழித்து படிப்பதால் ஏற்படும் சிரமத்தை விஷயத்தின் முக்யத் தன்மையைக் கருதி பொருட்படுத்தாதிருக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.]**

இதுவரையிலும் பொதுவாக வைத்தியத்திற்கும் ஜோதிஷத்திற்கும் இருக்கும் சம்பந்தம் கூறப்பட்டது. இனிமேல் தனித் தனியாக எட்டு அங்கங்களிலும் இரு நூல்களும் ஒன்றுக்கொன்று எவ்விதம் உதவுகிறது என்பதை சுருக்கமாக ஆராய்வோம். முதல் முதலில் காய சிகித்ஸையில் வியாதியை அறிந்து கொள்வதிலும் அதனால் ஏற்படும் தொந்தரவுகளை நீக்கிக் கொள்வதிலும் ஜோதிஷம் மிகவும் உதவியாக இருக்கிறது. உதாரணமாக பல தீபிகையில் ரோக நிர்ணயாத்யாயத்தில்,

सोग्रे पञ्चमभे भवेदुदररुक् रन्ध्रारिनाथान्विते
तद्वत्सप्तमनैधने सगुदरुक्छुक्रे च गुह्यामयम् ।
षष्ठेऽर्केऽप्यथवाष्टमे ज्वरभयं भौमे च केतौ व्रणं
शुक्रे गुह्यरुजं क्षयं सुरगुरौ मन्दे च वातामयम् ।

இது போன்ற பிரமாண வசனங்களால் ஜாதகனுக்கு என்ன வியாதி ஏற்பட்டிருக்குமென்று நிர்ணயிக்க முடியும். வைத்யன் ஜோதிஷம் அறிந்தவனாக இருந்தால் இரு வழியிலும் ஒத்துப் பார்த்து வியாதியையும் அதன் நிலைமைகளையும் சாத்யா சாத்ய விஷயங்களையும் அறிந்துகொண்டு அதை அனுசரித்து வைத்யம் செய்வதோடு கிரஹங்களின் தோஷங்களுக்கும் பரிஹாரம் தேட ஹேதுவாகிறது.

வைத்ய-சாஸ்திரத்தில் சிகித்ஸையைக் கூறும்பொழுது கிரஹங்கள், அவைகளின் அதி தேவதைகள் முதலியவைகளின் ஆராதனம் முதலியதும் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டிருக்கிறது. உதாஹரணமாக அஷ்டாங்க ஹிருதயத்தில்

व्रतदमयमसेवात्यागशीलाभियोगः द्विजगुरुसुरपूजा सर्वसत्वेषु मैत्री ।
शिवशिवसुतताराभास्कराराधनानि प्रकटितमलपापं कुष्ठमुन्मूलयन्ति ॥

என்று. இந்த சுலோகத்தில் சொல்லிய தேவதைகளை ஆராதிப்பதினால் குறிப்பிட்ட வியாதிகள் விலகும். குஷ்டரோக நிவர்த்திக்காக மயூர கவி என்பவர் சூர்ய சதகம் என்னும் ஸ்தோத்திரத்தைச் செய்ததாகவும் அந்த ஸ்தோத்திரத்தினால் சூர்யனை உபாஸித்து அவருக்கு குஷ்டரோகம் நிவர்த்தியானதாகவும் சொல்லப்படுவது சிறிதும் தவறில்லை என்பது அஸ்தோத்திரத்தைப் படித்து பொருள் அறிந்தவர்களுக்கு விளங்கும். பவபூதி முதலிய பல மஹாகவிகளால் அருள் வாக்கால் ஆர்யா ஸப்ததி முதலிய ஸ்தோத்திரங்கள் ரோக நிவிர்த்திக்காக இயற்றப்பட்டிருக்கிறது. இவ்விதம் பரிஹாரங்கள் செய்துகொள்வதற்கு ஜாதக ரீதியாக இருக்கும் கிரஹ தோஷங்கள் தெரிந்தால் மிகவும் அனுகூலமாக இருக்கும். அந்தந்த கிரஹங்களுக்கு தகுந்த பரிஹாரங்களைத் தேடலாம். கௌமார பிருத்யம் என்று கூறப்படும் பால சிகித்ஸையில் வைத்யம் எவ்வளவு உபயோகமோ அவ்விதமே ஜாதக பலனும் மிகவும் தேவையானதே. பாலாரிஷ்டம் அதன் பங்கம் முதலியது வைத்யர்களுக்கு சிகித்ஸைக்கும் ஸாத்யா ஸாத்ய நிர்ணயத்திற்கும் மிகவும் உபயோகமானது. இது விஷயமாக சாராவளீ முதலிய கிரந்தங்களில் மிகவும் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

बृहस्पतिर्भौमगृहेऽष्टमस्थः सूर्येन्दुभौमार्कजदृष्टमूर्तिः ।
अब्दैः त्रिभि; भार्गवदृष्टिहीनः लोकान्तरं यापयति प्रसूतम् ॥

वक्री शनिर्भौमगृहं प्रपन्नः चन्द्रेऽष्टषष्ठेऽथ चतुष्टये वा ।
कुजेन संप्राप्तबलेन दृष्टः वर्षद्वयं जीवयति प्रजातम् ॥

एकः पापोऽष्टमगः शुक्रगृहे पापवीक्षितो वर्षात् ।
मारयति नरं जातं सुधारसो येन पीतोऽपि ॥

लग्नद्वादशधनगैः क्रूरैर्म्रियते च रंध्ररिपुयुक्तैः ।
शुभवर्गमयातैर्मासे षष्ठेऽष्टमे वाऽपि ॥

होरेश्वरस्तु मृत्यौ पापैस्सकलैश्च दृश्यते बलिभिः ।
मासि चतुर्थे मरणं जातस्य करोति मुनिवाक्यम् ॥

द्यूनाष्टमगैः पापैः क्रूरग्रहवीक्षितैस्सह जनन्या ।
म्रियते शुभसंदृष्टैः सत्यस्य मताद्विदेद्व्याधिम् ॥

இது முதலான வசனங்களால் குழந்தை அதன் தாய் தந்தையர்கள் சகோதரர்கள் முதலியவர்களுடைய ரோகங்கள் கூட தெரிந்து கொள்ளமுடியும். அரிஷ்ட பங்கம் ஏற்படும் என்று தெரிவதினால் வைத்யன் தைர்யமாக சிகித்ஸை செய்ய முடியும். உதாஹரணமாக,

सौम्यग्रहैरतिबलैः विबलैश्च पापैः लग्नं च सौम्यभवने शुभदृष्टियुक्तम् ।
सर्वापदा विरहितो भवति प्रसूतः पूजाकरः खलु यथा दुरितैर्ग्रहाणाम् ॥

இதிலிருந்து கிரஹங்களை பூஜிப்பதாலும் நல்ல பலன்களை அடையமுடியும் என்று தீர்மானிக்கப் படுகிறது. இவ்விதம் குழந்தைகளின் பூதக்கிரஹ பீடையும் ஜோதிஷத்தால் தீர்மானிக்க முடியும்– **भीतिं च बालग्रहात्** என்றும், இவைகளுக்கு பரிஹாரம் சுச்ருதத்தில் விசேஷமாக கூறப் பட்டிருக்கிறது.

रक्षामतः प्रवक्ष्यामि बालानां पापनाशिनीम् ।
अहन्यहनि कर्तव्या या भिषग्भिरतन्द्रितैः ॥

तपसां तेजसां चैव यशसां वपुषां तथा ।
निधानं योऽव्ययो देवः स ते स्कन्दः प्रसीदतु ॥

ग्रहसेनापतिर्देवः देवसेनापतिर्विभुः ।
देवसेनारिपुहरः पातु त्वां भगवान्गुहः ॥

देवदेवस्य महतः पावकस्य च यः सुतः ।
गंगोमाकृत्तिकानां च स ते शर्म प्रयच्छतु ॥

रक्तमाल्यांबरः श्रीमान् रक्तचंदनभूषणः ।
रक्तदिव्यवपुर्देवः पातु त्वां क्रौंचसूदनः ॥

என்று. ஆகையால் பாலாரிஷ்ட பரிஹாரம் முதலியது தெரிவதினுல் வைத்யர்களுக்கு மிகவும் சௌகரியம் ஏற்படுகிறது. பூத வித்யை என்று கூறப்படும் கிரஹ சிகித்ஸையில் அஷ்டாங்க ஹிருதயம் முதலியதில் लक्षयेत्ज्ञानविज्ञान— என்று துடங்கி பூதங்கள் பிடிக்க வேண்டிய காரணங்கள், பிடிக்கும் விதம், பிடிக்கும் காலம், பிடிக்கப்பட்டவர்களின் லக்ஷணம், ஸாத்யா ஸாத்ய விசாரம், பரிஹாரங்களும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இவ்விதம் அபஸ்மாரமும் கிரஹங்களால் ஏற்படுவதாக சில மதங்கள் கூறுகின்றன. இந்தமாதிரியான பூதாதி பீடைகளை ஜோதிஷம் மூலம் நன்ருகப் பிரித்து அறியமுடியும். ஆகையால் இவ்விஷயத்தில் இரு சாஸ்திரங்களும் அறிந்திருந்தால் பூதங்கள் பிசாசுகள் முதலியதின் பேதங்களை தெளிவாக அறியலாம். அதிகப்படியாக ஜோதிஷம் தெரிந்திருந்தால் சூர்யாதி கிரஹங்களில் எந்த கிரஹங்களின் (துஸ்தான ஸ்திதியால்) கெட்ட ஸ்தானத்தில் இருப்பதால் இந்த பூத பீடை ஏற்பட்டது என்றும், அதற்கு எந்த கிரஹத்தை பூஜிக்கவேண்டும் என்றும் அறிய முடியும். உதாஹரணமாக இவ்விடம் மந்திரேச்வரரின் ஓர் சுலோகம் எழுதுவோம்;

पित्तोष्णज्वरतापदेहपतनापस्मारहृत्क्रोडज-
व्याधीन्वक्ति रविर्दृगार्त्यरिभयं त्वग्दोषमस्थिस्रुतिम् ।
काष्ठाग्न्यस्त्रविषार्तिदारतनयव्यापच्चतुष्पाद्भयं
चोरक्ष्मापतिधर्मदेवफणभृत्भूतेशभूपात्भयम् ॥

சூரியன் மூலம் இந்த கஷ்ட பலன்கள் ஏற்படலாம் என்று தெரிகிறது. இவ்விதம் சந்திரன் முதலிய ஒவ்வொரு கிரஹங்களுக்கும் ஏற்பட்ட சாமான்ய கஷ்ட பலன்களை விசேஷமாக தசாபுக்தி ஜாதக பலன்கள் இவைகளை பார்த்தும் நிர்ணயிக்கமுடியும். பூத வித்யைக்கு மட்டும் உபயோகமான சில வசனங்களை இவ்விடம் குறிப்பிடுவோம்.

சந்திரனுக்கு—

····भीतिं च बालग्रहात् दुर्गाकिन्नरधर्मदेवफणभृद्यक्ष्याश्च भीतिं वदेत् ।

குஜனுக்கு— रक्षोगन्धर्वघोरग्रहभयमवनीसूनुः ।

புதனுக்கு— गन्धर्वक्षितिहर्म्यवासिभिरपि ज्ञो वक्ति पीडां ग्रहैः ।

குருவுக்கு— रोगं किन्नरयक्षदेवफणभृद्विद्याधराद्युद्भवम् ।

சுக்ரனுக்கு— योगिनीयक्षीमातृगणात्भयम् ।

சனிக்கு— पीडां पिशाचादिभिः ।

ராஹுவுக்கு— पिशाचपन्नगभयम् ।

இம்மாதிரியாக பூதவித்யையில் இந்த இரு சாஸ்திரங்களும் மிகவும் உபகாரகங்களாக இருக்கின்றன. ஊர்த்வாங்க ரோகங்களிலும் கிரஹங்களின் நிலைமை தசைகள் முதலானதுகளால் நல்ல அறிவும் அனுகூலமும் அடையலாம். மந்திரேச்வரர் எழுதின பலதீபிகையில்:

शौर्यायांगिरसोयमायसहिता दृष्टा यदि श्रोत्ररुक्
मन्दारान्वितवीक्षिते व्ययधने चन्द्रारुणौ चाक्षिरुक् ।

பிருஹத்ஜாதகத்தில்:

नवमायतृतीयधीयुता न च सौम्यैरशुभा निरीक्षिताः ।
नियमाच्छ्रवणोपघातदा रदवैकल्यकराश्च सप्तमे ॥

ஸாராவளியிலும்:

दिनकरसुतेन सहितो निधने चान्त्ये समाश्रितश्चन्द्रः ।
वातश्लेष्मविकारैः दृष्टिं हन्यादशुभसंदृष्टः ॥

निधने दक्षिणनयनं त्यागे सव्यं हरेत्तु नियमेन ।
सोम्यैस्तु दृश्यमाने न हरेदथवा हरेत्पश्चात् ॥

एतेनैव तु विधिना सौरारदिवाकराश्रितश्चन्द्रः ।
कुर्यात् दृष्टिविकारं नानारोगैः परं जन्तोः ॥

एकादशे तृतीये होरायां पापसंयुते शशिनि ।
कर्णविकलो नरस्स्यात् पापग्रहवीक्षितः सद्यः ॥

இது முதலான கழுத்துக்கு மேற்பட்ட வியாதிகளைக் குறிப்பிட்டு அனேக யோகங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. விஷ சிகித்ஸையிலும் ஜ்யோதிஷம் மிகுந்த உதவியை செய்திருக்கிறது. விஷங்களின் பலாபல விசாரம் கடிபட்ட திதி முதலியதின் விசேஷ பலன், இவைகளைத் தெளிவாக அறியமுடியும். உதாஹரணமாக விஷ வைத்யசார ஸங்ஹம் என்னும் நூலில் :

चित्रा स्वाती मखाश्लेषा ज्येष्ठा श्रवणकृत्तिकाः ।
भरण्यार्द्राविशाखाश्च मूलं पूर्वात्रयं तथा ॥

अश्विनी रोहिणी चेति तारा मरणसंज्ञिताः ।
संध्याचतुष्टयं दुष्टं दग्धयोगश्च राशयः ॥

चतुर्थ्यां च चतुर्दश्यां पंचम्यामथवाऽपि वा ।
अष्टम्यां च नवम्यां च कृष्णपक्षे विशेषतः ॥

संक्रमे चाष्टमे राशौ वारे च कुजमन्दयोः ।
उदये च तयो राहोरुदये च विशेषतः ॥

जन्मनि प्रत्यरे चैव विपत्तौ च वधेऽपि च ।
ग्रहणे परिवेषे च विष्ट्यां दष्टो न जीवति ॥

जीवकाव्योदयौ ज्ञेन्द्वोः स्वक्षेत्रेषु तथोदयौ ।
शुक्रगुर्वोर्विधौ दृष्टिः दूतकाले शुभावहाः ॥

இந்தவிதமான பிரமாணங்களால் விஷத்தின் சக்தி யை நிர்ணயிக்கலாம். தசாபுக்திகளிலும் विषभयमरिपीडा— முதலிய வாக்யங்களால் விஷம் தீண்டும் காலங்களையும் அறிந்து கொள்ளலாம். சல்ய தந்திரம் என்னும் சஸ்திர சிகித்ஸையிலும் மாரக தசை விரணகாரக அங்காரகாதி கிரஹங்களின் இஷ்ட ஸ்தானம், கெட்ட ஸ்தானம் இவைகளில் இருப்பது முதலியதுகளை தெரிந்து கொள்ளு வது மிகவும் பலன் கொடுக்கும். ரஸாயன சாஸ்திரத்திலும் अथ पुण्येऽह्नि संपूज्य पूज्यांस्तानाविशेच्छुचि: — இது முதலான வச னங்களால் நல்ல காலத்தில் செய்யப்படும் ரஸாயனங்கள் தான் நல்ல பலனை அளிக்கும் என்றும் தசா புக்திகளையும் அனுசரித்து ரஸாயன விதிகளை ஆரம்பிக்கவேண்டும் என் றும் தெரிகிறது. கெட்ட தசாதி காலங்களில் செய்யப் பட்ட ரஸாயன சிகித்ஸை, ஆரோக்யத்தைத் தருவதற்கு பதிலாக அபாயத்தைத் தந்துவிடும். வாஜீகரண தந்திரம் நல்ல புத்திரனை அடைவதற்கென்றே மஹர்ஷிகளின் கருத்து; இல்லற சுகத்தை அடைவது இரண்டாம் பக்ஷம். உதாஹரணமாக வாஜீகரணாத்யாயத்தில்,

अच्छाय: पूतिकुसुम: फलेन रहितो द्रुम: ।
यथैकश्चैकशाखश्च निरपत्यस्तथा नर: ॥

அதாவது நிழலுக்கும் உபயோகப்படாமல் துர்வாசனை யுடைய புஷ்பங்களையுடையதும், தனிப்பட ஒரே ஒரு கிளை யுடன் நிற்கும் உபயோகமற்ற மரம்போல் சந்ததி இல்லாத மனிதன் நிந்திக்கப்படுகிறான். புத்திர பாக்யம் உள்ள மனிதனின் வாழ்க்கையை குறித்து மிகவும் அழகாக சிலா கிக்கப்படுகிறது. அதாவது தடுமாறித் தடுமாறி நடந்து கொண்டு மழலைச் சொற்களுடன் தெளிவில்லாமல் பேசிக் கொண்டும் உடம்பெல்லாம் அழுக்கு படிந்தும், வாயி லிருந்து ஜலம் ஒழுகிக் கொண்டும் இருந்தாலும் கூட அதை குழந்தைகளின் அழகாக நினைத்து மனிதன் கொஞ் சிக்குலாவி கட்டித்தழுவி என்ன களிப்படைகிறான். உண்மையில் இந்த நிலைமையில் இவ்வளவு மகிழ்ச்சி ஏற் படும் பக்ஷம் பிற்காலம் அக்குழந்தை நல்ல படிப்புப்

படித்து நல்ல புகழுடனும் நெறி தவருமலும் மானத்துடனும் குலத்திற்குச் சிறப்பைத் தரக்கூடியதாக இருந்தால் அதற்கு ஒப்பாக எந்தப் பொருளைக் கூறமுடியும் என்று வாக்படர் புகழ்கிருர். ஆகையால் புத்திரனை விரும்புகிறவர் வாஜீகரண விதிகளை வைத்யர்களிடம் தெரிந்து உபயோகப் படுத்துவதுடன், தன்னுடையவும் மனைவியுடையவும் ஜாதகங்களில் புத்திரதோஷம் இருக்கிறதா? இருந்தால் அது எவ்விதமான தோஷ பரிஹாரங்களால் தீர்க்கக் கூடியது? என்பதை ஜோதிஷ மூலம் அறிந்து அதற்கு வேண்டிய பரிஹாரங்களையும் அனுஷ்டிப்பதால் நல்ல ஸந்ததிகள் ஏற்படுகிறது. புத்திர சிந்தாத்யாயத்தில் **सुस्था विलग्नशशिनोः**— என்று தொடங்கி புத்திரயோகங்கள் அபுத்திர யோகங்கள், க்ஷேத்திரபீஜஸ்புடம், அதன் பலம், ஸந்தான திதிஸ்புடம், அதன் தோஷ பரிஹாரம் முதலியது தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. எழுத எழுத விரியும் என்று பயந்து சுருக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இவ்விதம் எட்டு அங்கங்களில் ஜோதிஷம் எவ்வகை உபயோகம் என்பது சிறிது எழுதப்பட்டது. இந்த வியாசத்தின் ஆரம்பத்தில் ஆயுர்வேதம் வேதமாகவும், ஜோதிஷம் அதற்கு அங்கமாகவும் குறிப்பிடப் பட்டது. அது விஷயத்தில் சிறிது அபிப்ராய பேதம் இருக்கிறது. அதாவது ந்யாய சாஸ்திர ப்ரவீண சாணதத்வ சிந்தாமணிக்காரர் முதலியவர்களால் பதினெட்டு வித்யைகளில் ஆயுர்வேதம் முதலியதற்கு உபவித்யையின் ஸ்தானம் தான் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஜோதிஷம் வேதாங்கமானதால் மஹா வித்யைகளில் அடங்கியது. ஆகையால் மஹா வித்யையான ஜோதிஷம் எவ்விதம் உபவித்யையான ஆயுர்வேதத்திற்கு அங்கமாக முடியும். உபவித்யைக்கும் மஹாவித்யைக்கும் என்ன பேதம் என்ருல் திருஷ்டார்த்தங்களை (ப்ரத்யக்ஷமான பொருள்களை) விளக்குகிறது உபவித்யை. அதிருஷ்டார்த்தங்களை (இந்திரியங்களுக்கு புலப்படாத விஷயங்களை) விளக்குகிறது மஹா வித்யை. இப்பொழுது ஆயுர்வேதத்தின் விஷயமும் ஜோதிஷ விஷயமும் மிகவும் வேறுபட்டதாக ஆகிறது. ஆயுர்வேத விஷயம் ப்ரத்ய

க்ஷம். ஜோதிஷ விஷயம் பரோக்ஷம். (கண் முதலிய தற்குப் புலப்படாதது) இவைகளுக்கு முன் சொன்ன சம்பந்தம் (அதாவது ஆயுர்வேதம் அங்கி, ஜோதிஷம் அங்கம் என்றோ அங்காங்கி பாவ சம்பந்தம்) எவ்விதம் சொல்ல முடியும். இந்த சம்பந்தம் இல்லாவிடில் நமது வியாசமே அநாவச்யம். ஜோதிஷத்தால் ஆயுர்வேதத்திற்கோ ஆயுர்வேதத்தால் ஜோதிஷத்திற்கோ உபகாரம் இல்லாவிடில் வைத்யனுக்கும் ஜோதிஷனுக்கும் தொடர்பே தேவையில்லை என்று ஏற்படுகிறது. ஆகையால் இந்த இரு சாஸ்திரங்களுக்கும் பரஸ்பர சம்பந்தம் குறிப்பிடாவிடில் முன் குறிப்பிட்ட அங்காங்கீ பாவம் இல்லாமல் போகும். அதற்காக என்ன சம்பந்தம் கல்பிப்பது என்று நினைத்தால், ஸம்பந்தத்தை கல்பனை செய்யவேண்டிய அவச்யமில்லை. ஒன்றுக்கொன்று இருக்கும் சம்பந்தம் முன் எழுதின விஷயங்களால் நம்மால் நன்றாக அனுபவிக்கப்பட்டிருக்கும்பொழுது எதற்காக கல்பனை செய்யவேண்டும். எது அங்கம். எது அங்கி என்பதுதான் தீர்மானிக்கவேண்டுமேயல்லாமல் சம்பந்தம் புதிதாகக் கல்பிக்க வேண்டியதில்லை.

पुराणन्यायमीमांसाधर्मशास्त्रांगमिश्रिताः ।
वेदाः स्थानानि विद्यानां धर्मस्य च चतुर्दश ॥

என்று யாக்ஞவல்க்ய ஸ்மிருதியில் சொல்லி யிருக்கிறபடி வித்யாஸ்தானங்கள் 14—பதினான்கு என்று முடிவு செய்யும் பக்ஷம் ஆயுர்வேதமும் தனுர்வேதமும் அதர்வண வேதத்தின் உள் பிரிவுகளாகவும், காந்தர்வ வேதம், சாமவேதத்தின் பாகமாகவும், தண்ட நீதி ஸ்மிருதியின் உள் பிரிவானதால் ஸ்மிருதிகள் வேதங்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டதால் அவைகளும் வேதங்களாகவே கருதப்பட வேண்டும். ஆகையால் ஆயுர்வேதம் அதர்வண வேதமாகவே கருதப்பட்டால் வேதத்தின் அங்கமான ஜோதிஷம் ஆயுர்வேதத்திற்கும் அங்கம் என்பது பிரமாண சித்தம். இதை அனுசரித்தே ஆயுர்வேதத்தின் ஆரம்பத்திலும் **विधाताऽथर्वसर्वस्वं** — என்று அதர்வ வேதத்தின் பொருளான ஆயுர்வேதத்தை பிரம்மா உபதேசித்ததாகக் கூறப்படு

கிறது. இவ்விஷயத்தை ஒத்துக்கொள்ளாமல் ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், தண்டநீதி இன்னுன்கும் உபவித்யைகள் என்று கூறும் பக்ஷம். மஹாவித்யையாகிய ஜோதிஷத்துக்கு ஆயுர்வேதம் அங்கமாகக் கருதப் படுவதில் ஆக்ஷேபணை இல்லை. மஹாபுராணம், உபபுராணம், மஹா வித்யை, உபவித்யை போல் ஏற்பட்டிருக்கும் பெயர்களே ஒன்றுக்கொன்றிருக்கும் தொடர்பை ஒட்டித்தான் ஏற்பட்டிருக்கிறது. நமக்கும் அனுபவத்தால் ஜோதிஷத்திற்கும் ஆயுர்வேத்திற்கும் தொடர்பு இருப்பதாக தெளிவாகத் தெரிய வருவதால் மஹாவித்யை ஜோதிஷம் ஆயுர்வேதம் உபவித்யை என்ற மதத்தை அனுசரித்து ஜோதிஷம் அங்கி. ஆயுர்வேதம் அங்கம் என்று கூறுவதில் விரோதம் இல்லை. எவ்விதம் ப்ரத்யக்ஷாதி பிரமாணங்களுக்குப் புலப்படாத விஷயங்களில் வேதசாஸ்த்ரங்கள் பிரமாணங்களோ அவ்விதமே ப்ரத்யக்ஷவிஷயமான ஆயுர்வேதம் அப்ரத்யக்ஷ விஷயமான ஜோதிஷத்தை உபஜீவித்து அங்கியாக இருப்பதால் தோஷமில்லை. இவ்விதம் கால பேதத்திலும் விஷய பேதத்திலும் ஆயுர்வேதமும் ஜோதிஷமும் பரஸ்பரம் உபஜீவ்ய உபஜீவகங்களாக (அங்க அங்கிகளாக) இருப்பதால் இரண்டுமதமும். (அதாவது ஆயுர்வேதம் ஜோதிஷத்திற்கு அங்கம், ஜோதிஷம் ஆயுர்வேதத்திற்கு அங்கம் என்கிற மதமும்) பொருந்தும்.

कुशिकतनयमुख्यान् ज्यौतिषं वैद्यतन्त्रं
निखिलनिगमसारं ज्ञानयोगं वरिष्ठम् ।
विशदमुपदिदेश स्वाश्रितान् यः प्रभुस्सः
लसतु हृदयपद्मे शक्तिपाणिः सदा नः ॥

வைத்திய சந்திரிகை பழய சஞ்சிகைகள் ஒரு வருஷத்திற்கு தபால் செலவு உள்பட ரூ. 2—4—0.

உபகாரியதர்சீ,
தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
17, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி,

# தஞ்சை ஸரஸ்வதீ மஹாலயமும் வைத்தியச் சுவடிகளும்

*[வைத்ய விசாரத S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி.]*

தஞ்சை மஹாராஜா ஸ்ரீ சரபோஜி அவர்கள் அளவற்ற ஊக்கத்துடன் பாடுபட்டு சேர்த்து உருவாக்கிய ஸரஸ்வதீ மஹாலயம் பிராசீன கிரந்த கோசஸ்தானங்களில் முதன்மை பெற்றதென்பது யாவருமறிந்ததே. அபிநவ போஜராஜன் என பிரஸித்திபெற்ற அம்மகாராஜா வைத்யக சாஸ்திரம், வைத்திய கலை இவைகளில் நன்கு தேர்ச்சிபெற்ற ஓர் நிபுணர் குழாம் ஒன்றைத் தனது தன்வந்தரி மஹாலில் நிறுவி, நாநாதேசங்களிலிருந்தும் தன்னிடம் பரிசு பெற வந்த வைத்திய வித்துவான்களிடமிருந்தும், ஆங்காங்கு தான் யாத்திரைக்காகச் செல்லும் ஸமயம் தான் ஸந்தித்த வைத்திய வரர்களிடமிருந்தும், அனேக கிரந்த ரத்னங்களைச் சேகரித்துத் தனது தன்வந்தரி மஹாலில் அக் கிரந்தங்களிலுள்ள விஷயங்களைப் பற்றிய சர்ச்சை, பரீக்ஷை முதலியவைகளை நடத்தி, அதில் ஸித்திபெற்ற ஔஷதமுறைகள், சிகித்ஸா யுக்திகள் இவைகளைப் பலவிதக் கிரந்தங்கள் மூலம் தானே விளக்கியுள்ளார். இவ்விதம் புஷ்பங்களிலிருந்து தேன்போல் மிகவும் அரும்பாடுபட்டு சேகரிக்கப்பட்ட வைத்தியக் கிரந்தங்கள் ஸம்ஸ்கிருதத்தில் சுமார் முன்னூறும், தமிழில் இருநூறு கிரந்தங்களும் இருக்கின்றன.

## ஸம்ஸ்கிருதச் சுவடிகள்

அவைகளில் சில—ஸுச்ருத ஸம்ஹிதை, அதன் பில்ஹண வ்யாக்யானம், அஷ்டாங்கஹ்ருதயம், அதன் ஸர்வாங்கஸுந்தரி, ஹேமாத்ரி என்ற இரண்டு உரைகள், மாதவ நிதானம், வைத்திய சிந்தாமணி, சார்ங்கதர ஸம்ஹிதை ஆகிய பிரஸித்த கிரந்தங்கள். இவைகளைத் தவிர வைத்தியத்தின் ஒவ்வொரு கிளைகளைப் பற்றியும் தனித்தனியே விவரணங்களடங்கிய கிரந்தங்கள் தனிப்பெருமையுடன் விளங்குகின்றன.

ரோக நிர்ணயத்திலும், நாடீ விக்ஞானத்திலும் நுட்பமான விவரங்களுடன் "நாடீ பரீக்ஷா, நாடீ விக்ஞானம், நாடீ லக்ஷணம், ரோக நிர்ணயம்" என்னும் கிரந்தங்கள் இருக்கின்றன.

ஆகார பத்திய விதியிலும், அதற்குத் தகுந்த ஆகாரம் தயாரிப்பதிலும், அன்னபானாதிகளின் குணவிவரணத்திலும் பூர்ண முக்யத்

துவம் வாய்ந்த, "அன்னபான விதி, போஜன குதூஹலம், பத்யா பத்ய நிர்ணயம், பாகாவலீ, பாகதர்ப்பணம்" என்ற கிரந்தங்கள் நன்கு பயன்படுபவை.

குழந்தைகளின் ரோகங்களுக்கென்றே பாலதந்திரம் என்ற இரு வைத்யர்களால் தனித்தனியாக எழுதப்பட்ட கிரந்தங்களிருக்கின்றன.

வைத்திய கிரந்தங்களில் காணப்படும் ஓஷதி வாசக சப்தங்களுக்கு பிரதிபதப் பொருள் தற்காலங்களில் காணப்படும் டிக்ஷனரி போன்று அகராதி வரிசையில் தொகுக்கப்பட்டு பல அரியபத விளக்கங்களுடன் காணப்படும், வைத்ய நிகண்டுக்கள், மூலிகானுக்ரமணிகை (இதன் சிலபாகம் ஸரஸ்வதி மஹாலின் பத்திரிகை வாயிலாக வெளிவந்துள்ளது) அஷ்டாங்கஹிருதய நிகண்டு, ஹ்ருதய தீப நிகண்டு, மூலிகா ஸித்தஸங்கிரஹம் இவைபோன்ற கிரந்தங்கள் கிரந்த பரிசீலன ஸமயத்தில் ஏற்படும் சிரமத்தை எளிதில் நீக்குகின்றன.

மற்றும் தென்னாட்டிற்கேற்பத் தயாரித்த, பல ஔஷதங்களின் நன்முறைகள், விசேஷமாகத் தற்சமயம் ஸித்த வைத்தியம் எனத் தனிப்பெயர் பெற்று பிரிந்துபோன தமிழ் வைத்தியமுறையின், பூர்ண உருவாகிய பல அழகிய ரஸௌஷதங்கள், க்ஷீ பக்வரஸங்கள், கட்டு மாத்திரை முறைகள், போன்றவைகளெல்லாம் தெளிவுற விளங்குமாறு, சில இடங்களில் தமிழில் விரிவுரையுடன் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இந்த கோஷ்டியில் "நாநாவித வைத்யகம்" என்ற பெயருள்ள சுமார் 25 சுவடிகள் தமிழிலும் தெலுங்கிலும் அர்த்தத்துடனும் மிகப்பாடுபட்டு சேர்க்கப்பட்டிருக்கின்றன.

மற்றும், கக்ஷபுரம் என்ற ஸித்தநாகார்ஜுன தந்திரம், ஆனந்தகந்தம், ஸித்தயோக ரத்னவளீ, ஸாராவளீ, சதச்லோகீ, ரஸரத்ன ஸமுச்சயம், ரஸரத்னாகரம், வைத்யாமிருதம், ராஜமிருகாங்கம், ரஸராஜலக்ஷ்மீ, யோகசிந்தாமணி, யோகசதகம், பேஷஜஸர்வஸ்வம், பேஷஜகல்பம், சிகித்ஸாமிருதஸாகரம், கௌதுகசிந்தாமணி, சமத்கார சிந்தாமணி, கல்யாணகாரகம், உத்பல பரிமளம், ஆயுர்வேத மஹோததி என்பன போன்ற பல அபூர்வ கிரந்தங்கள் இதுவரை அச்சில் ஏறாதவை. இந்த கோசத்திலிருக்கும் ரஸரத்ன ஸமுச்சயம் தற்சமயம் நமக்கு கிடைக்கும் ரஸரத்ன ஸமுச்சயத்தைக் காட்டிலும் முற்றிலும் வேறானது. பல அபூர்வ விஷயங்களடங்கியது.

இதைத்தவிர சரபோஜிக்கு, முன்னாண்ட துளஜாராஜனின் கிருதியான தன்வந்தரி விலாஸம், தன்வந்தரி ஸாரநிதி இவை இரண்டும் அம்மகாராஜனின் ஆயுர்வேத சாஸ்திர அறிவை நன்கு புலப்

படுத்துகின்றன. இவைகளைத்தவிர அந்தந்த வியாதிகளுக்கென்று அதிஸார சிகித்ஸை, ஸர்வகாஸ பேஷஜம் என்பவை போன்ற சில முக்கியக் குறிப்புகள் போன்ற கிரந்தங்களும, நேத்திர பிரகாசிகை என்ற கண்ணில் வரும் 96 ரோகங்களின் ஸம்ப்ராப்தி முதலியவைகள் சிகித்ஸை இதன் விவரணமடங்கிய கிரந்தமும் ஒவ்வொருவரும் படிக்கத் தகுந்தவை.

## தமிழ்ச் சுவடிகள்

இவைகளில் அகஸ்தியர், தேரையர் போகர், திரிமூலர் போன்ற ஆயுர்வேத மஹர்ஷிகளின் பல நன்னூல்களும், விசேஷமாக சரபேந்திரர் என்ற சரபோஜியின் கிரந்தங்களென சுமார் இருபது சுவடிகளும், சஸ்திரவிதி, அட்டை விதி போன்ற சஸ்திர கர்மாவில் வழிகாட்டிகளான கிரந்தங்களும் இருக்கின்றன. சரபேந்திரரின் கிரந்தங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வியாதி சிகித்ஸையிலும் அவரால் தனது தன்வந்தரி மஹாலில் அனுபவத்தில் பரீக்ஷித்துப் பார்த்து ஸித்தமான வழிகளாதலால் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இவ்விதம் அரும்பாடுபட்டு சேர்த்து வைத்திருக்கும் பொக்கிஷம் பிற்காலத்தில் நம்போன்றவர் பயன்படுத்திக் கொள்ளத்தான். ஆனால் அவைகள் தற்சமயம் எளிதில் பயன்படுத்திக் கொள்ளக்கூடியவைகளாக இல்லை. காரணம் யாதெனில், அக்காலத்திற்கேற்ப, சுவடிகளிலும், மட்டிக் காகிதங்களிலும் அவர்களுக்குக் கிடைத்த ஸாதனங்களைக்கொண்டே அந்த பொக்கிஷங்களை நிரப்பியிருக்கிறார்கள். நம்போன்று கால பலத்தினால் சோம்பேறிகளாக்கப்பட்டவர்களுக்கு அந்தத் தேன் எளிதில் கிடைப்பதற்கு இல்லை. தேனுடன் மெழுகு, வண்டு முதலியவைகளும் இருக்கின்றன. தேன் வண்டுகளுக்குப் பயப்படாது, மெழுகை விலக்கி தேனை மாத்திரம் சாப்பிடுவது ஸுலபமல்ல. அளவற்ற ஊக்கமும், சலியாத மனப்பான்மையும், நமது பெரியோர்களிடம் அளவற்ற நன்மதிப்பும் கொண்ட ஒருவன் தான் சரபோஜியின் பொக்கிஷத்தைத் திறந்து ஆவல்தீர அனுபவிக்க முடியும், அவ்விதம் ஒருவன் சிரமப்பட்டால் பிறகு தேன் குடிப்பதற்கும், தேனால் பயன் பெறவும் நிபுணர்கள் குழுமிவிடுவார்கள்.

ஆயுர்வேதத்தில் ஆராய்ச்சி செய்யவேண்டுமென்ற மனப்பான்மையுடைய நமது பெரியோர்களும், ஸஹோதரர்களும் மிருக திருஷ்ணிகையில் ஏமாறாமல், உண்மையாக சரபோஜியால் நம் நன்மைக்காக ஆழமண்டாமல் நிறுவப்பட்டிருக்கும் ஸரஸ்வதீ மஹாலயத்தில் தங்களது கவனத்தைச் சிறிதே செலுத்தினார்களாகில், அவர்களிஷ்ட ஸித்தி வெகு எளிதில் ஈடேறும் என்பதில் ஐயமில்லை.

# :: ஸ்வராஜ்ய ஸித்தி ::

[ ஆசிரியர் ]

நமது பாரத தேசத்திற்கு சென்ற ஆகஸ்டு 15உடன் அடிமைநாடு என்ற பெயர் அழிந்துபோய் விட்டது. ஸ்வதந்த்ர தேசமாகி விட்டது. தாய்நாடு விடுதலைபெற்ற ஆனந்தத்தினுல் ஒவ்வொரு இந்தியனுடைய ஹிருதயமும் பூரித்துப் பொங்கிற்று. விடுதலை தினத்தின் உத்ஸவக் கொண்டாட்டப் பிரவாஹங்கள் கரை புரண்டோடின. சுதந்திரம் கிடைத்த மேன்மையைப்பற்றி தலைவர்கள், புலவர்கள், எழுத்தாளர்கள், ஜோதிடர்கள், விஞ்ஞானிகள், பத்திரிகைக்காரர்கள், பொதுஜனங்கள், தர்மாசார்யர்களான மடாதிபதிகள் மற்றும் ஸகல சார்பினரும் அழகழகான கட்டுரைகளால் ஆனந்தத்தை வளர்த்தனர். சுமார் இருநூறு வருஷங்களாக அந்ய ஆட்சியில் அவதிப்பட்டுக் கொண்டிருந்த நமது நாட்டுக்கு சுய ஆட்சி ஏற்பட்டதென்பதைப் பார்க்கிலும் பெரிய ஸந்தோஷ விஷயம் பாரினில் வேறில்லையென்றும், எதிர்பார்க்கும் ஆரோக்கிய ஸ்வதந்திரத்திற்கு இது முதல்படியாகுமென்று நாமும் உணர்ந்து ஆனந்திக்கிருேம். எமது உணர்ச்சி எவ்விதமெனக் கூறுவோம்.

நம்மிடம் நமது தேசத்தை வெள்ளையர் எந்த நிலையில் விட்டுள்ளார் என்று பலர் பலவகையில் விமர்சம் செய்கின்ருர்கள். அகண்டமான பாரத தேசத்தைக் கண்டங்களாக்கி விடுத்தனர் என்று சிலர் வருந்துகின்ருர்கள். ஸம்ஸ்தானங்களுக்கு ஸ்வாதந்தர்யம் பறிமுதல் செய்யப்பட்டனவென்று சிலர் மதச்சண்டைகளையும், கக்ஷிப் பாகுபாடுகளையும் பெருக்கி நிரந்தரமான உள்நாட்டுக் கலவரத்திற்கு ஆஸ்பதமாக்கி நாட்டை விட்டனர் என்று சிலர். அன்னவஸ்திரத்திற்கே பறக்கும்படியான பஞ்சப் பிசாசு தலைவிரித்தாடும்படி நாட்டை நாசமாக்கித் தள்ளிப் போயினர் என்று சிலர். இவ்விதம் பற்பல விதத்தில் நமது தேசம் சின்னபின்னப்பட்டே நம்மிடம் திரும்பிவந்துள்ளது. இங்கு கூறப்பட்ட குறைகளெல்லாம் குறைகளேயாயினும் பாரதம் போல் விஸ்தாரமானதும் ஸுபிக்ஷமானதுமான ஒரு தேசத்தை நூற்றுண்டுக்கணக்காக அதிலிருந்து ஸகல ஸுக போகங்களையு மநுபவித்துக் கொண்டிருக்கும்போது அந்த தேசத்தைக் கைவிடவேண்டிய நிர்பந்தமேற்பட்டு விடும்பொழுது மேற்கூறிய சிரமங்கள் தேசத்தில் ஏற்படுவது இயல்பே. இந்தக் குறைகள், சிரமங்கள் யாவும் நாடு சுதந்தரமடைந்த பிறகு வெகு

வேகத்தில் நிவிருத்தியாகி விடும். ஐயமில்லை. ஆனால் இங்கு பலர் பலவிதமாகக் கூறிய தோஷங்கள் எல்லாவற்றையும் பார்க்கிலும் மிகப்பெரிதான ஒரு விஷவிருக்ஷத்தையே நமது தேச மக்களுடைய ஹிருதய பூமியில் வேரூன்றச் செய்து பிறகு விலகியுள்ளனர் வெள்ளையர் என்று நாம் பெரிதும் வருந்துகிறோம்.

இந்தியருக்கு இந்திய நாகரீகத்தில் இந்தியக் கலையில் வெறுப்பும், வெள்ளையரின் நாகரீகத்தில் விருப்பமும் ஏற்படும்படி இந்திய மக்களின் ஹிருதயத்தையே மாற்றிவிட்டது வெள்ளைக்காரனின் அரசாட்சி. இந்தியாவின் பூமி எல்லையில் ஓரளவு முஸ்லீம்கள் அபஹரித்துப் போய்விட்டதானது நிவிருத்திக்க முடியாத நிரந்தரக் கெடுதலாகாது. போன பூமிபாகம் நம்மிடம் வந்துவிட முடியும். வெள்ளையரின் நாகரீக மோஹத்தில் நமது ஹிருதயமே மயங்கிக்கிடக்கின்றதே. ஹிருதயம் தூஷிக்கப்பட்டிருந்தால் இதர சரீராங்கங்கள் ஆகிருதியில் பெரியதாயிருந்தாலும் புஷ்டிபெறாது போலவே இந்திய மக்களுடைய மனப்பான்மை வெளிநாட்டு நாகரீக மோஹத்தில் மயங்கியுள்ளபடியால் இந்தியா தேசம் ஸ்வராஜ்யம் பெற்றாலும் பிரயோஜனமில்லாமலாகுமோ வென்று நாம் அங்கலாய்க்கிறோம். தேசத்தின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட தேசத்தலைவர்களுக்கும் மற்றும் பொதுஜனங்கட்கும் தேசவிடுதலை அளித்ததுபோலவே உடன் மானசிக விடுதலையும், ஆன்மீக விடுதலையும் அருள் புரியும்படி ஸ்ரீ பகவானைப் பிரார்த்திக்கிறோம்.

வெளிநாட்டாரின் நாகரிக மயக்கத்திலிருந்து நமது ஜனங்களுடைய ஹிருதயம் தெளிவுபெற்று விளங்காவிடில் உயிரற்ற உடலிற்குச் செய்யும் அலங்காரங்கள் போல்தான் தேசத்தின் விடுதலையும் பயனற்றதாகும்.

சென்ற சில நூற்றாண்டுகளாக நமது தேசத்தில் நமது முன்னோர்களால் ஆயுர்வேதம்போன்ற விஞ்ஞானங்களுக்கும் பிரயோகங்களுக்கும் மேல்மேல் அபிவிருத்தி செய்ய முடியாமல் போனதிற்கு முக்கிய காரணங்கள் தேசத்தில் ஒன்றன்பின்னொன்றாக ஏற்பட்டுக்கொண்டிருந்த சண்டை சச்சரவுகளே யாகுமே தவிர நமது கலைகளில் நம் முன்னோருக்கு ஒருக்காலும் அநாதரவோ அப்பிரியமோ ஏற்பட்டதில்லை. பொருள் பிராணனைப் பார்க்கிலும் சாஸ்திரங்களில் பெரியோருக்கு இருந்தபிரேமையினால்தான் இந்த உத்பாதங்களுக்கெல்லாம் எஞ்சி இன்னமும் சாஸ்திரங்கள் சில காப்பாற்றப்பட்டு நமக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

நமது தேசத்தில் சண்டைக் கஷ்டங்கள் விலகியும், சுதந்தரம் பெற்றும்கூட இப்பொழுதுள்ள சூழ்நிலை நம் தலைவருக்கே நமது

சாஸ்திரங்களிலும், தர்மங்களிலும் உண்மையபிமான மற்றுப் போகும்படியாக மாறி நிற்கின்றது. வெகு சீக்கிரத்தில் இந்த மோஹநிலை ஒழிந்து தேசத்தில் நமது தர்மத்திலும், சாஸ்திரங்களிலும் அன்பும் ஆதரவும் ஏற்படும்படிக்கு பகவானைப் பிரார்த்திக்கின்றோம். அப்பொழுதுதான் நமது நாட்டினருக்கு ஆரோக்கிய விஷயத்தில் ஸ்வராஜ்யம் ஸித்திக்கும். அதற்கு இப்போது கிடைத்துள்ள தேசவிடுதலை வழிவிடுமென்று நம்புகிறோம்.

---

## அறிவிப்பு.

வைத்திய சந்திரிகைக்கு மாதம் பத்து ரூபாய் இனாம் அளித்துக்கொண்டிருக்க முன் வந்துள்ள அன்பர்களுடைய பெயர்கள் சென்ற சஞ்சிகையில் வெளியிடப் பட்டன. சென்னை வைத்யரத்ன ப. ஸ்ரீ. M. துரைசாமி அய்யங்காரவர்களும் பிரதி மாதம் பத்து ரூபாய் தருவதாய் ஒப்புக்கொண்டு ஒரு மாதப் பணத்தை சந்திரிகை கார்யாலயத்திற்கு அனுப்பியுள்ளார் என்பதையும் கிருதக்ஞதையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பத்திரிகை வெளியிடுவது இந்த துர்பிக்ஷ காலத்தில் எவ்வளவு ரூபாய் செலவினால் ஸாத்தியமாக வேண்டியிருக்கிற தென்பதை அறியாதாரிரார். சந்தா செலுத்தாத நேயர்களுக்கு முன்கூடித் தனிக் கடிதம் மூலம் விவரம் தெரிவித்துவிட்டு சந்திரிகை வி. பீ. பீ. மூலம் அநுப்பப் பட்டதை சில வைத்யர்கள் ஏற்றுக் கொள்ளாமல் திருப்பி அநுப்பிவிட்டார்கள். தங்களுக்குப் பத்திரிகை தேவையில்லை யென்பதை முன்னதாகவே 'இவ்வளவு தேதிக்குள் சந்தா செலுத்தாவிடில் வி. பீ. பீ. மூலம் பத்திரிகை அநுப்பப்படும்' என்று மண்டல ஆபீஸிலிருந்து கடிதம் வந்தவுடனேயாவது தெரிவித்திருந்தால் கார்யாலயத்திற்கு வீண் வேலையும் பணச் செலவுமில்லாமல் இருக்கும்.

வைத்திய ஸகோதரர்கள் தங்கள் கடமையை உணர்ந்து மண்டலத்தின் ஸங்க சக்தியை பலப்படுத்தவும், சாஸ்த்ராபிவிருத்திக்கும், பிரசாரத்திற்கும் அத்யாவசியமான வைத்திய சந்திரிகையை எல்லாவிதத்திலும் ஆதரித்து முன்னேற்றமடைவிக்க உதவும்படிக்கு பிரார்த்தனை செய்யப்படுகிறார்கள்.

A. ராகவராவ்,
உதவி கார்யதர்சி,
தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம்.

# மதுமேஹத்தில் ஸ்வாநுபவம்

(ஸ்ரீ V. R. ஸுப்பிரமணிய அய்யர், திருச்சிறாப்பள்ளி.)

சாஸ்திரீ. வயது 55. மூத்திரத்தில் மாதுர்யம் (Sugar) 5—6.% சுமார் 3 வருஷங்களாக இருப்பது ஆங்கில வைத்தியர்களுடைய பரீக்ஷையால் தெரிவிக்கப்பட்டது. இரு துடைகளிலும் மிகப் பெரிய பிரமேஹ பிடகைகள். 1945 ஜூலையில் இந்த நிலைமையில் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். நான் செய்துள்ள சிகித்ஸையின் விவரம்:—

**உள்ளுக்குச் சாப்பிட:**

(1) **ஸைர்யகாதி சூரணம்:** அரைக்கால் தோலா காலை, மாலை தேனில்.

(2) **குமார்யாதி தைலம்:** 1 டீஸ்பூன் அளவு ராத்திரி 9 மணிக்கு.

5-வது நாள் மூத்திரத்தில் மாதுர்யம் (Sugar) 5%லிருந்து 3%க்கு இறங்கியது.

8-வது நாள் 1%க்கு இறங்கியது. 18-வது நாளில் மூத்திரத்தில் மாதுர்யம் (Sugar) சிறிதுமில்லை.

பிடகைகளுக்கு மேலுக்கு செய்யப்பட்ட சிகித்ஸை:—

(1) **ஜயபாலாதிவர்த்தி:** மருந்தைத் துணியில் தடவி வர்த்தியாகச் செய்து நெருப்பில் கொளுத்தி அணைத்து அதிலிருந்து வரும் புகையை பிடகைகளில் படும்படிக்குக் காண்பிக்கப்பட்டது. காலை மாலை இரு தடவைகள். 5-வது நாளில் பிடகைகள் பக்குவமடைந்து எவ்வளவு அகலம் பிடகை வாஸ்து இருந்ததோ அவ்வளவும் கருகிப் போய், நஞ்சுபோய், தானாகவே உடைந்துவிட்டன. பூயத்தை வெளியாக்கிய பிறகு கருகி உணர்ச்சியற்று இறந்துபோன தோல் பாகங்களை மட்டும் கத்திரித்து விட்டேன். சுத்தம் செய்து மதூச்சிஷ்டாதிலேபம் துணியில் தடவி போடப்பட்டது.

ஒரு மாதத்தில் இரண்டு புண்களும் முற்றிலும் ஆறிவிட்டன. ஒருமாதத்திற்குப் பிறகு உள்மருந்தும் நிறுத்தப்பட்டுவிட்டது. 6 மாதங்களுக்குப் பிறகு மூத்திர பரீக்ஷை செய்ததிலும் மாதுர்யம் (Sugar) சிறிதுமில்லை. பிறகு பரீக்ஷை செய்யப்படவில்லை.

சென்ற மாதத்தில் (ஜூன் 1947 முதல்வாரம் இவருக்குக் கண்ணில் சஸ்திர சிகித்ஸை செய்யவேண்டி மூத்திர பரீக்ஷை செய்தபொழுது மாதுர்யம் 3% (Sugar) இருந்தது. ஸைர்யகாதி சூர்ணமும் குமார்யாதி தைலமும் உள்ளுக்குக் கொடுக்கப்பட்டது. மூன்று வாரத்தில் மூத்திரத்தில் மாதுர்யம் (Sugar) அகன்றுவிட்டது. கண் ஆபரேஷன் நடந்து குணமாகிக்கொண்டிருக்கிறது.

வைத்திய ஸகோதரர்களிடம் நான் செய்துகொள்ளும் பிரார்த்தனை— ஸைர்யகாதி சூர்ணம், குமார்யாதி தைலம் இவ்விரண்டு ஔஷதங்களும் மதுமேஹியின் மூத்திரத்தில் வெளியாகும் மாதுர்யத்தை (Sugar) வேகத்தில் குறைக்கும் சக்தி பெற்றுள்ளவை. மதுமேஹிக்கு மாம்ஸ கிலேதங்களை அகற்றி விரணங்களை சீக்கிரம் ஆறும்படி செய்பவை. ஜயபாலாதி வர்த்தியும் மதூச்சிஷ்டாதி லேபமும் பிரமேஹ பிடகைகளில் பேதன—சோதன—ரோபணங்களைச் சொல்வதில் உயர்ந்த உபகாரமானவை என்பது என் அநுபவத்தில் நன்கு கண்டுள்ளேன். இவைகளுடைய யோகங்களைப் பூராவும் கீழே விவரித்துத் தருகிறேன். எல்லாம் எளிதில் செய்யக் கூடியவை. இவைகளை மதுமேஹத்தில் ஒவ்வொரு வைத்தியரும் கொடுத்துப் பார்த்து கிடைக்கும் குணங்களைப் பரீக்ஷித்து பலனை யாவருக்கும் தெரியும்படிக்கு வைத்திய சந்திரிகா வாயிலாக தன் அநுபவங்களையும் வெளியிடப் பிரார்த்திக்கிறேன்.

**(1) குமார்யாதி தைலம்:—** சோத்துக்கத்தாழை சோறுடன் பூலாஞ்சி வேர் பட்டையை சூர்ணம் செய்து சேர்த்து பிழிந்து அதிலிருந்து வரும் ரஸம் பக்கா 2 படி.

| | | | |
|---|---|---|---|
| சிற்றாமணக்கெண்ணெ | ,, 1 ,, | தாழைவிழுது சார் பக்கா | 1 படி |
| இளநீர் | ,, 1 ,, | வெள்ளாட்டுப்பால் ,, | 1 ,, |
| அல்லி ஸமூலம் இடித்தெடுத்த ஸ்வரஸம் | ,, 1 ,, | வெள் அருகன் வேர் கஷாயம் ,, | 1 ,, |

இவைகளை ஒன்றுசேர்த்துக் கொள்ளவும்.

**கல்கம்:—** அதிமதுரம் பலம் 8 குன்றுமணி வேர் 2 பலம்
வெள்ளை ஏலம் ,, 1 பலம்

இவைகளைப் பொடித்து வெள்ளாட்டுப் பால் விட்டரைத்து, ஷை எண்ணெயுடன் கலந்து அடுப்பிலேற்றி 8 நாள் வரை சிறு தீயாக எரித்து 9-வது நாள் நன்றாக பதத்தில் காய்ச்சி வடிகட்டும் ஸமயம் வடிக்கும் பதத்தில் குங்குமப்பூ 2 ரூபாய் எடை பொடி செய்து பாத்ர ப்ரக்ஷேபமாக போட்டு வடிகட்டி எடுத்து வைக்கவும்.

அளவு 1 டீ ஸ்பூன்.

**(2) ஸைர்யகாதி சூர்ணம்:—** சிறு குறுஞ்ஜா தழை காயவைத்து வஸ்த்ரகாயம் செய்தது 10 தோலா, காய் பூவரசம் பூவை காய வைத்து வஸ்திரகாயம் செய்தது 10 தோலா, இரண்டையும் ஸமமாகச் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அளவு வீசம் தோலா எடை.

**(3) ஜயபாலாதி வர்த்தி :—**

சுத்தம் செய்த நேர்வாள பருப்பு 10 தோலா
ரஸம் 1 தோலா கந்தகம் 1 ,,
வீரம் கால் ,, பூரம் கால் ,,

செய்முறை: ரஸம் கந்தகத்தை கஜ்ஜலி செய்து கொண்டு பிறகு ரஸம் பூரம் இரண்டையும் சேர்த்து அரைத்துக் கொண்டு பிறகு கொஞ்சம் கொஞ்சமாக நேர்வாளத்தைப் போட்டு அரைக்கவும். எல்லாம் ஒன்று சேர்ந்த உடன் திருகுகள்ளிப் பால் 4 அவுன்ஸ் சேர்த்து 4 நாள் விடாமல் அரைத்து பாட்டிலில் எடுத்து வைக்கவும். வெளி உபயோகத்திற்கு மட்டும்.

**(4) மதுச்சிஷ்டாதி லேபம் ;—**

தேன்மெழுகு 2 பலம் பெல்மாண்டு வத்தி 2 பலம்
மயில் துத்தம் அரை ,, அபின் கால் தோலா
நல்லெண்ணை அரை வீசம்.

செய்முறை: நல்லெண்ணையை சுடவைத்து அதில் மெழுகு வத்தி தேன்மெழுகு இரண்டையும் சேர்த்து உருக்கி, அதில் துத்தத்தை பொடி செய்து போட்டு, அபினை கிள்ளி போட்டு ஒன்று சேர்ந்த உடன் நுரைத்து வரும்பொழுது குளிர்ந்த ஜலம் ஒரு சொம்பு அதில் விடவும். கெட்டியான பின் ஜலத்தை வடித்து விட்டு மெழுகை மட்டும் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

வெளி உபயோகத்திற்கு மட்டும்.

# செய்திக் குறிப்புகள்.

சென்னையில் கவர்ன்மெண்டு இந்தியன் மெடிகல் ஸ்கூல் முன்போலவே தொடர்ந்து நடத்துவதாக செய்யப்பட்ட புதிய உத்தேசம் கைவிடப்பட்டது. ஸ்கூல் இப்போது இருக்கும் மாணவர்களுடைய படிப்பு முடியும் வரைதானிருக்கும். காலேஜில் ஏற்படும் வளர்ச்சியை அநுஸரித்து உசிதம்போல் பிறகு செய்யப்படும் என்று ஒரு சர்க்கார் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (Hindu)

*** ***

1947 ஆகஸ்டு 9-10 தேதிகளில் திருச்சி ஜில்லா லால்குடியில் தமிழ்நாடு சித்தவைத்திய யூனியன் மாகாண

மகாநாடு வெகு சிறப்பாக நடந்தேறியது. வரவேற்புக் கமிட்டிக்கு தலைவர்: வைத்திய பாஸ்கர Dr. ஹக்கீம் ஜனாப் A. Z. மகமத் தைத்திபுடீன் சாஹெப் பகதூர். கார்ய தர்சீ: வைத்ய பாஸ்கர ஸ்ரீ C. ஸோமஸுந்தரம் L. I. M மகாநாட்டுத் தலைவர்: ஈரோடு வைத்திய வள்ளல் திருவாளர் ஈ. வே. கிருஷ்ணசாமி நாயக்கர் அவர்கள். சென்னை மாஜிப் பிரதமர் ஸ்ரீ T. பிரகாசம் அவர்களும், திருவிதாங்கூர் நித்தியானந்த சுவாமி அவர்களும் உடல் நலமில்லாமையால் மகாநாட்டுச்கு எதிர்பார்த்தபடி வரவில்லை. தமிழ் ஜில்லாக்களில் எல்லா இடங்களிலிருந்தும் ஏராளமாக சித்தவைத்தியர்கள் குழுமியிருந்தனர். அநேக விதமான சொற்பொழிவுகளாற்றப்பட்டு மாகாண சித்த வைத்திய யூனியன் ஸ்தாபனத்தை பலப்படுத்த வேண்டிய முயற்சிகளும் செய்யப்பட்டன. பூவாளூர் ஸ்ரீ C. ஸோமஸுந்தரமவர்களின் உழைப்பினாலும், ஊக்கத்தினாலும் மகாநாடு மிக வெற்றிகரமாக நடந்தது.

—நமது நிருபர்.

## பிரார்த்தனை.

**வைத்திய ஸஹோதரர்களே !**

**प्रचारः संघशक्तिश्च सिद्धेः परमसाधनम् ।**

பிரசாரமும் ஸங்க சக்தியும் கார்யஸித்திக்குச் சிறந்த ஸாதனங்கள் என்று தாங்கள் அறிந்ததே. ஆகவே, பொது ஜனங்களிடையே ஆயுர்வேதத்தின் மகத்துவத்தைப் பிரசாரம் செய்ய பரம சாதனமான வைத்திய சந்த்ரிகைக்குத் தங்களுடைய நண்பர்கள் யாவரையும் சந்தாதாரர்களாக்கி படிக்கும்படி செய்யுங்கள்.

வைத்தியர்களையும், அபிமானிகளையும் மண்டலத்திற்கு அங்கத்தினர்களாகச் சேருங்கள். வைத்திய சந்த்ரிகைக்கும் ஆரோக்கிய சந்த்ரிகைக்கும் விஷய தானம் செய்யுங்கள்.

மண்டல வருஷச் சந்தாவை அனுப்பாதவர்கள் தயவு செய்து உடனே அனுப்பி விடுங்கள்.

# நமது தபால்பெட்டி.

சில வைத்திய நண்பர்கள் தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் 15வது ஸம்மேளனம் தஞ்சை ஜில்லாவில் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டதே; அது எப்போது நடைபெறும்? சென்ற மூன்று ஸம்மேளனங்களில் நடந்ததுபோல் போட்டிக்கட்டுரைகளும் பரிசுகளும் வரும் ஸம்மேளனத்திலுண்டாகுமா? கட்டுரைக்குள்ள விஷயத்தை முன்னதாகவே நியமங்களுடன் வெளியிட்டால் அதிக உபகாரமாயிருக்குமே என்று நமக்குக் கடிதமெழுதிக் கேட்டிருக்கிறார்கள்.

இக்கடிதங்களிலிருந்து ஸம்மேளனத்தில் நடைபெறும் போட்டிக் கட்டுரைப் பரிசு விஷயம் சில எழுத்தாளர்களுக்கு உத்ஸாகத்தை உண்டுபண்ணி யிருக்கிறதாக ஸ்பஷ்டமாகத் தெரிகின்றது. தொழில் புரிந்துகொண்டிருக்கும் வைத்தியர்களுக்குக் கட்டுரை எழுத அதிக அவகாசம் முன்பதாகக் கொடுக்கவேண்டியது அவசியந்தான். ஆதலால் தஞ்சை ஜில்லாவில் ஸம்மேளனம் நடத்தத் தீர்மானித்துள்ள அன்பர்கள் வரவேற்பு சங்கத்தை சீக்கிரத்திலேயே நிறுவி, அவசியமான பூர்வாங்க ஏற்பாடுகளையும் செய்துவிடப் பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

இதற்குள் வைத்திய வித்வான்கள் எந்த இரண்டு விஷயங்கள் தமிழிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் பரிசு போட்டிக்காக ஏற்பாடு செய்யலாம், எது மாதிரி நியமங்கள் ஏற்படுத்தலாமென்று தங்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை செப்டம்பர் 15 தேதிக்குள் வைத்திய சந்திரிகை ஆசிரியருக்கு எழுதியனுப்பும்படிக்கு பிரார்த்திக்கப்படுகிறது. பொது அபிப்பிராயத்தை அநுஸரித்து விஷயம் நிர்த்தாரணம் செய்ய இவ்வழி உபகரிக்கும்.

# வைத்தியர்களுக்கு

## :: முக்கியமான அறிவிப்பு ::

*
* *

தங்களுடைய
அரிய நேரத்தை
மருந்துகள் தயார் செய்வதில்
செலவழிக்காமல் தங்களுக்காக மிகுந்த
சாஸ்திரப் பயிற்சி பெற்ற வைத்தியர்களைக்
கொண்டு சாஸ்திர முறைப்படி உயர்ந்த
சரக்குகளை சரியாகச் சேர்த்து
மருந்துகளைத் தயார் செய்து
வைத்திருக்கும்

* *
*

## திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் லிட்.,

சின்னக் கடைத் தெரு, தெப்பக்குளம், P. O. திருச்சி.

இடமிருந்து பெற்றுக் கொள்ளவும்.

---

N. B:— வைத்தியர்களுக்கு மிகக் குறைந்த விலைக்கு மருந்துகள் சப்ளை செய்யப்படும்.

VAIDYA CHANDRIKA. Regd. No. M. 4018.

வைத்ய வாசஸ்பதி பண்டிட்

**P. S. ராமசர்மா அவர்களின்**

நீண்ட கால பரீக்ஷை அனுபவங்களினால் கண்டு பிடிக்கப்பட்ட

கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி ஸஞ்சீவி"

(Regd.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக் கட்டிகளை எந்நிலைமையிலும்

போக்குவதிலும் வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்,

எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:—

**ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா,**

கரூர், S. I. Ry.

Published by Pandit S. M. Sundararajacharya for Tamil Nad Ayurveda Maha Mandalam & Printed at the Sri Vilasam Press, Srirangam.